
உ

# அருள் ஒளி



## கார்த்திகை தீபம் சிறப்பிதழ்




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

கார்த்திகை - மார்கழி (2019)

144

## நாவலர் பெருமான் குருபூசை 20.11.2019




சேர் பொன்.இராமநாதன் குருபூசை
30.11.2019



திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
குருபூசை 07.11.2019



உ



# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

கார்த்திகை – மார்கழி மாத மலர்
2019

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

# நாவலர் பெருமான் பிறந்த வளவு புனிதமாகப் பாதுகாக்கப்படவேண்டும்

ஈழத்திருநாட்டில் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெரியார் நாவலர் பெருமான். இவர் பிறந்து வளர்ந்த இல்லம் இப்போது அரச உடமையாக்கப் பட்டுள்ளது. எழுபதுகளின் பிற்பகுதியில் இலங்கையில் இந்து கலாசார அமைச்சராக விளங்கிய உயர்திரு செல்லையா இராஜதுரை அவர்கள், நாவலர் பெருமான் பிறந்த வளவை அரச உடமையாக்கி நாவலர் கலாசார மண்டபம் என்ற பெயரில் கட்டடமொன்றை நிறுவினார். நாவலர் பெருமான் பயன்படுத்திய பொருட்களை பாதுகாத்தல், இவரது வெளியீட்டு பிரதிகளை சேவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள வசதி செய்தல் என்பன கருதியே இந்தக் கலாசார மண்டபம் கட்டித் திறக்கப்பட்டது.

யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு, தொடர்ந்து ஏற்பட்ட போர்ச் சூழலில் யாழ்.மாநகரசபை தலைமை அலுவலகம் என்பன அழிக்கப்பட்டதனால் நாவலர் கலாசார மண்டபத்தை யாழ்.மாநகர சபையினர் பொறுப்பேற்று, தமது உடமைகளை அங்கு வைத்து செயற்படுத்தி வந்தனர். யாழ். பிரதான வீதியில் இயங்கிவந்த தொல்பொருட் காட்சியகம் நாவலர் பிறந்த வளவுக்குள் தற்காலிகமாக மாற்றப்பட்டு இயங்கத் தொடங்கியது. இப்பொழுதும் அதேயிடத்திலேயே சீரின்றி இயங்கிவருகின்றது. நாவலர் பிறந்த வளவில் அவரது இலட்சியத்திற்கு மாறான சில விடயங்கள் இடம்பெறுவது குறித்தும் பலரும் கவலை தெரிவித்து வருகிறார்கள்.

நாவலர் பெருமான் பிறந்த வளவை சைவப் பாரம்பரியத்தைப் பேணும் வகையிலான புனிதமான இடமாக மாற்றியமைத்தல் வேண்டும். நாவலரது நூல்கள்

மற்றும் அவர் பயன்படுத்திய பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, எதிர்கால சந்ததியினர் அதனை மகிமைக்குரிய இடமாக கருதுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவது அவசியமாகும்.

இந்தியாவில் புனித மகான்களின் நினைவிடங்களை மிகக் கவனமாகப் பாதுகாத்து வருகிறார்கள். அந்த வகையில் நமது நாட்டிலும் சைவத்தமிழ் மக்களின் காவலராகிய நாவலர் பெருமானைக் கௌரவித்து அவர் பிறந்த வளவிலுள்ள நினைவாலயத்தை தகுந்த முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் மிக முக்கிய கடமையாகும்.

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

# கார்த்திகை தீபத்தின் கதை

கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று சந்திரன் கிருத்திகை நட்சத்திரத்திலிருக்கும் போது கார்த்திகை தீப விழா கொண்டாடப்படுகிறது. நெருப்பை வழிபடுவது இத்தனிப் பெருவிழாவின் நோக்கம்.

எல்லாம் இறையுருவம். நெருப்பைச் சிறப்பாகச் சிவனுரு என்பர். அழலாடும் பெருமான் சிவபெருமான் செந்தீ வண்ணன்.

> அழலாட அங்கை சிவந்ததோ ? அங்கை
> அழகால் அழல்சிவந்த வாறோ ?

என்ற திருவாக்கைச் சிவநேசர்கள் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

கார்த்திகைத் தீப விழா பண்டைக்காலந் தொட்டு நிகழ்ந்து வந்திருப்பதாக ஊகிக்கலாம். நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் தமது தொல்காப்பிய உரையில் (தொல்காப்பியம் என்ற மிகவும் பழமையான தமிழ் இலக்கிய உரையில்) கார்த்திகைத் தீபத்தைக் குறிப்பிடுகிறார். இவ்வுரையாசிரியரை உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர் எனப் புகழ்ந்து பேசுகிறார்கள். அத்தகைய தமிழ் பெரும்புலமைத் திறன்வாய்ந்தவர் இவர். 'கார்த்திகைத் திங்களில் (கார்த்திகை மாதத்தில்) கார்த்திகை நாளில் (நட்சத்திரத்தில்) ஏற்றிய விளக்கு' என்பது இவர் வாக்கு.

'கார் நாற்பது' என்ற நூலிலும் கார்த்திகை விளக்கின் பெருமை கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்தில் கார்த்திகை விளக்கைத் 'தையலார்' கொண் டாடும் விளக்கீடு என்று குறிக்கப்பெறுகின்றது. கார்த்திகைத் தீப விழா கொண்டாடுவதில் தமிழ்ப் பெண்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. "விளக்கீடு காணாமல் போய் விட்டாயோ பூம்பாவாய்" என்ற பொருள்படத் திருஞானசம்பந்தர் தம் பூம்பாவைப் பதிகத்தில் பாடியிருப்பது சிவபக்தர்களின் நினைவுக்கு வரும்.

தமிழர்கள் எங்கே குடியேறி இருந்தாலும் மலேசியா, பிஜித்தீவு, தென்னாபிரிக்காவாக இருந்தாலும் தங்களுடன் தங்கள் மலை விளக்கையும் கொண்டு போயிருக்கிறார்கள். இந்த மலை விளக்கே திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபப் பெருவிழா. இத் திருவண்ணாமலையின் பெருமைதான் கொஞ்சமோ!

> "உண்ணாமுலை உமையாளொடும்
> உடனாகிய ஒருவன்
> பெண்ணாகிய பெருமான்மலை"

என்று திருவண்ணாமலையைச் சிறப்பித்துப் பாடுகிறார் ஞானசம்பந்தப் பெருந்தகை. இத்திருப்பாட்டிலே அண்ணாமலையின் அருவித்திரளையும் குறிப்பிடுகிறார். இத்தகைய அண்ணாமலையைத் தொழுவோரின் தீவினை அற்றுப்போகும்

என்றுகூடச் சம்பந்தர் சொல்லவில்லை; நல்வினை தீவினை என்ற இருவகை வினைகளின் பாசமும் அற்றுப்போகும் என்கிறார். தீவினை இரும்பு விலங்கு என்றால் நல்வினை பொன் விலங்கு என்பது நம் தத்துவக் கொள்கை. இந்த இரண்டின் பந்த பாசங்களிலிருந்தும் விலகி நின்று தொண்டாற்றுகிறானாம் உண்மைத் தொண்டன்.

ஆண்டு தோறும் திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபவிழா மிகவும் சிறப்பாய்க் கொண்டாடப்படுகிறது. வேறு சிவன் கோவில்களும் இச்சிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றன. நாளடைவில் இத்தீப விழாக் கொண்டாட்டம் பெருமாளின் தொண்டர்களையும் வசீகரித்தது. ஆகவே பெருமாள் கோயில்களும் இக்கொண்டாட்டத்தில் ஈடுபடலாயின.

"ஆதியும் அந்தமும் (அடியும் முடியும்) இல்லா அரும்பெருஞ் சோதியைத்தான் பரஞ்சோதி என்கிறது திருவெம்பாவையின் இரண் டாவது பாட்டு. ஐந்தாம் பாட்டு, "மால் அறியா, நான் முகனும் காணா மலை" என்று வருணிக்கிறது. இறைவன் ஒளி வடிவமாகத் திகழ்கின்றான் என்னும் கொள்கை, எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளத்தக்க சிறந்ததொரு பேருண்மையே ஆகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் 'கார்த்திகை விளக்கீட்டு விழா' யாருமே கொண்டாடி, இறைவனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும்.

நில நூலில் நான்கு வகை மலைகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் நெருப்பினால் உருவாகிய பாறைக் குன்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்வகைக் குன்றை 'இக்னீயஸ்ராக்' என்ற நில நூல் அறிஞர் கூறுவர். திருவண்ணாமலையைச் சிவனுக்குரிய பஞ்சபூதத் தலங்களில் அக்கினித்தலம் என்கிறார்கள்.

எத்தனைக் கதைகள்! எத்தனைச் செவிவழிச் செய்திகள் சிறப்பிக்கின்றன அண்ணாமலை தீப விழாவையும் இதன் மனோதத்துவ உட்பொருளையும். இவ்வுட் பொருளை உணர்ந்து அண்ணாமலையைத் தொழுவோருக்குத்தான் என்ன அக மகிழ்ச்சி! என்ன மன அமைதி!

ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம், நமது உள்ள வினைகளே!

என்ற பக்த மனோபாவத்தை மனோதத்துவ அறிஞர்களே புரிந்து கொள்ள முடியும்.

அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ,
நல்ல ஆயின நன்மை அடையுமே

என்ற திருநாவுக்கரசரின் வாக்கில் எத்தகைய மனோதத்துவ உண்மையைக் காண்கிறோம்.

கோயிலுக்கு முன் சொக்கப் பனை கொளுத்திக் கார்த்திகை தீபம் கொண்டாடுவதில் சிறுவர்களுக்கும் பெருமகிழ்ச்சி, பெரியவர்களுக்கும் அப்படியே. சொக்கப்பனை சுடர் வீசி ஓங்கி எரியும் அழகு, சாதாரண மனிதர்களையும்

கவருகிறது. மனிதருள் முனிவர்களையும் வசீகரிக்கிறது. இக்காட்சி இன்பத்திலே சிவ பெருமான் சாதுக்களை இம்சித்து வந்த அசுரர்களின் தேர்களை கொளுத்திவிட்டார் என்பது போன்ற புராணக் கதைத் துணுக்குகளும் நினைவிற்கு வருகின்றன.

குளிர்ந்த மாதமாகிய கார்த்திகையில் சொக்கப்பனையின் வெப்பத்தை ஓரளவு அணுகி நின்று அனுபவிக்கக் கூடுமல்லவா? இதை அடிப்படையாகக் கொண்டு ஒரு புராணக் கதைத் துணுக்கும் தோன்றியிருக்கிறது. மகாபலிச் சக்கரவர்த்திக்கு உடம்பிலே ஒருவகை நோய் ஏற்பட்டதாம். அந்த நோவு உணர்ச்சியைத் தீபவிழாவைக் கொண்டாடி அத்தீபத்தை அணுகி நின்று, அவன் போக்கிக் கொண்டானாம்.

தேவி மகிஷாசுரனுடன் போரிட்ட பின் கார்த்திகை விழாவைக் கொண்டாடித் தன்னைத் தூய்மை செய்து கொண்டதாகவும் ஒரு புராணத் துணுக்கு உண்டு. இத்தீப விழாவைப் புராணமும் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன. இராஜேந்திர சோழ தேவனின் கல்வெட்டுச்சாசனம் ஒன்று காளத்தி ஆலயத்தில் காணப்படுகிறது. இதில் தீபவிழா பிரஸ்தாபம் வருகிறது.

இந்த விழாவில் தீபங்களுக்கு நெய் வழங்கியதைக் குறிப்பிடுகிறது விஜயநகரப் பேரரசனாகிய வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயனின் சாசனம் ஒன்று. இதைத் தேவிகாபுரத்திலுள்ள பிரகதாம்பாள் கோயிலில் காணலாம்.

பனி நீராடும் பெண்கள் தாங்கள் நோற்கும் நோன்பின் ஒரு பகுதியாக அந்நீராட்டத்தை மேற்கொள்கிறார்கள். அப்போது குளிருக்கு மருந்தாகத் தழலாடும் இறைவனின் பேரைச் சொல்கிறார்கள் என்கிறது திருவெம்பாவை. தீபவிழா கொண்டாடுவதும் பிறவிக் குளிருக்கு ஓர் அருமருந்து என்பது பக்தர்களின் கருத்தாகும்.

### திருவம்மானை

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்க திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

# திருவண்ணாமலை தீபத் திருவிழா

சு.மீனாட்சி சுந்தரம், திருவண்ணாமலை

## முன்னுரை

சைவ சமயத்தில் இறைவன் எல்லா மக்களுக்கும் அருள்தர கடமைப்பட்டுள்ளார். எனினும் சிலர் தீட்சை பெற்று இறைவனைக் காண்பர். பலர் தீட்சை பெறும் பேறு கிடைக்காமல் வாழ்க்கைச் சூழலில் உழன்று இருப்பர். இந்நிலையில் அனைவருக்கும் இறைவன் அருள் கிடைக்க சைவநெறி கூறும் ஒரு சிறப்பு நிகழ்வே திருவிழா ஆகும். அதாவது திருவிழா என்பது எல்லா மக்களுக்கும் இறைவன் அருட்பார்வையில் தீட்சை அளிக்கும் காலம், இடம் என்பதாம். ஆகவே, மக்கள் அனைவரும் இறைவன் அருள்பெற திருவிழாக்களுக்குத் தவறாமல் சென்று இறைவனை வழிபட்டு திருவிழாவின் நோக்கத்தினையும், குறிக்கோளினையும் மனதில் பதித்து முக்தியடையும் வழியே திருவிழா ஆகும் எனலாம். இவ்வகையில் பஞ்சபூதத் திருத்தலங்களுள் நடுநாயகமாய் விளங்கும் சிறப்புத் தலமான திருவண்ணாமலைத் தீபத் திருவிழா குறித்து இவண் காண்போம்.

## கொடியேற்றம்

ஒரு விழா தொடங்கும் போது, திருக்கோவில்களில் கொடி ஏற்றுவது மரபு. அவ்வகையில் இத்திருக்கோவிலில் தீபத் திருவிழாவை முன்னிட்டு, காலை 6.00 மணிக்குக் கொடிக்கம்பத்தருகில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி முறைப்படி வெகுசிறப்பாகக் கொடியேற்றம் நடைபெறும். இதன் பொருள் பாசம், பந்தம் அறுந்து ஞானம் பெற்று, சிவனின் திருவடியை அடையும் முறையே கொடியேற்றம் ஆகும். அதாவது கொடிமரம் சிவனையும், கொடிக்கயிறு அருள் சக்தியையும், கொடி சீலை ஆன்மாவையும், தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும் என்பர். அதனைத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு காலையிலும் இரவிலும் உற்சவ மூர்த்திகள் விதவிதமான வாகனங்களில் மாடவீதிகளில் பவனி வருவர். மேலும், ஒவ்வொரு விழாவும் ஒரு குறிக்கோளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும். திருவிழாக் காலங்களில் இறைவன் எழுந்தருளி வரும் ஒவ்வொரு வாகனமும் அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அருளல் எனும் ஐந்தொழில்களையும் செய்து வரும் பரம்பொருள் ஒன்றே என்பதனைக் குறிப்பதாக இருப்பதனை அறியமுடிகிறது.

## முதல் நாள் திருவிழா

இத்திருவிழா நாளன்று காலை பஞ்சமூர்த்திகள் வெள்ளி விமானங்களிலும், மாலையில் பஞ்சமூர்த்தி முசிகம், மயில், அதிகாரநந்தி அம்சம், சின்ன ரிஷப வாகனங்களில் திருவீதி உலா வருவர். இத்திருவிழாவினைக் காணவரும் பக்தர்களுக்கு உண்மையல்லாத ஒன்றை உண்மையென்று எண்ணும் அறியாமையைப் போக்கியருள வேண்டும் சிவனே என்னும் குறிக்கோளைக் கொண்டு விளங்குவதை உணர முடிகிறது.

## இரண்டாம் நாள் திருவிழா

காலையில் விநாயகர், சந்திரசேகரர் விமானம், சூரியபிரபை வாகனத்தில் புறப்பாடு, பின் மாலையில் பஞ்சமூர்த்திகள் வெள்ளி, இந்திர விமானங்களில் திருவீதி உலா வருவர். இவ்விழாவின் போது இறைவா அனைத்து உயிர்க்கும் தாயும், தந்தையுமாய் விளங்குபவன் நீயே என்றும், இந்த தூல உடம்பு, சூக்கும உடம்பு ஆகிய இரண்டும் ஆன்ம அன்று என்னும் உண்மையை எமக்குத் தந்தருள்க என்னும் குறிக்கோளைக் கொண்டு பக்தர்களுக்குத் தரிசனம் வருவதாக அமைகிறது.

## மூன்றாம் நாள் திருவிழா

இவ்விழா நாளன்று காலையில் விநாயகர், சந்திரசேகரர் திருமேனிகள் விமானம் மற்றும் பூதவாகனம் ஏறி புறப்பாடு. மாலையில் பஞ்சமூர்த்திகள் சிம்ம வாகனம், வெள்ளி அன்ன வாகனம் முதலியனவற்றில் திருவீதி உலா நடைபெறும். இவ்விழாவின் நோக்கம் மூவகை பற்றும் நீங்க அருள்க என்பதாகும். அதாவது, உலகப் பற்று, பொருள் பற்று, பெண் பற்று ஆகிய மூன்றிலிருந்தும் விடுபட்டு ஞானம் பெற இறைவா துணைநில் என்று வணங்குதல் ஆகும்.

## நான்காம் நாள் திருவிழா

காலையில் விநாயகர், சந்திரசேகரர் திருமேனிகள் விமானம் மற்றும் நாக வாகனம் ஏறிப் புறப்படுதல், மாலையில் பஞ்சமூர்த்திகள் வெள்ளி கற்பகத் தரு, வெள்ளி காமதேனு ஆகியவற்றில் திருவீதி உலா வருதல். இவ்விழாவினைக் காண்பவர்க்கும், வழிபடுபவர்க்கும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்காரணங்களும் நீங்கி ஆன்ம சுத்தமடையும் என்னும் குறிக்கோளைக் கொண்டதே இவ்விழாவாகும்.

## ஐந்தாம் நாள் திருவிழா

காலையில் மூஷிகம், கண்ணாடி ரிஷப வாகனத்தில் விநாயகர், சந்திரசேகர் புறப்பாடு. மாலையில் பஞ்சமூர்த்திகள் வெள்ளி மூஷிகம், வெள்ளி மயில், வெள்ளி பெரிய ரிஷபம் ஆகியவற்றில் ஏறி புறப்பாடு மற்றும் திருவீதி உலா நடைபெறும். இத்திருவிழாவினைக் காணவரும் பக்தர்க்கு ஐம்பொறிகளும் அடங்கி இறைவன் அருள் கிடைக்கும் என்றும், ஆணவம், கன்மம், மாயை, வயிந்தவம், திரோதாயி என்னும் ஐந்து தீய குணங்களும் அகலும் என்னும் குறிக்கோளைக் கொண்டதாகும்.

## ஆறாம் நாள் திருவிழா

காலையில் விநாயகர், சந்திரசேகரர் மூஷிகம், வெள்ளியானை வாகனம் ஏறி புறப்பாடு. 63 நாயன்மார்கள் விமானம் ஏறி புறப்பாடு. மாலையில் பஞ்சமூர்த்திகள் வெள்ளிரதம், இந்திர விமானம், வெள்ளி விமானங்கள் ஏறி புறப்பட்டு திருவீதி உலாவருதல். இதன் நோக்கம் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் உட்பகை ஆறினையும் நீக்குக இறைவா என வணங்குதல் ஆகும்.

## ஏழாம் நாள் திருவிழா

இத்திருவிழா நாளன்று பஞ்சமூர்த்திகள் (மஹா ரதங்கள்) தனிதனித் தேர்களில் எழுந்தருளுதல், விருச்சிக லக்னத்தில் திருத்தேர் (பெரிய தேர்) வடம் பிடித்து அரோகரா கோசத்துடன் பக்தர்கள் புடைசூழ வாத்திய முழக்கத்துடன் திருவீதி உலா வரும். மாலையில் பஞ்ச மூர்த்திகள் திருத்தேர்களிலிருந்து இறங்கி ஆத்தான மண்டபத்தில் எழுந்தருளல். இவ்விழாவின் நோக்கம் தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் ஏழுவகைப் பிறப்பும் நீங்கப் பெறுதல். அதாவது பிறப்பில்லா நிலையை அடைய இறைவனை வேண்டுதல் என்றும், அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், சூனியம், மாச்சரியம், பயம் என்னும் ஏழு வகை தீய குணங்களை நீக்கி அருள்க என இறைவனை வணங்குவதாகவும் கருதுவர்.

## எட்டாம் நாள் திருவிழா

காலையில் விநாயகர், சந்திரசேகரர் ஆகியோர் வெள்ளி விமானங்கள் மீது புறப்பாடு. மாலை 4.00 மணியளவில் பிச்சாண்டவர் தங்கமேரு ஏறி புறப்பாடு. இரவில் பஞ்சமூர்த்திகள் குதிரை வாகனம் ஏறி புறப்பாடு. இவ்விழாவினைக் காண்போருக்கு இறைவன் எண்வகை குணங்களையும் ஆன்மாக்களுக்கு அருளுவான் என்பர். அதாவது முற்றும் உணர்த்தல், வரம்பில் இன்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், தன் வயத்தனாதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல் என்னும் எட்டு குணங்களையும் உணர்த்துவதே எட்டாம் நாள் திருவிழாவாகும்.

## ஒன்பதாம் நாள் திருவிழா

கண்ணாடி விமானத்தில் காலையில் விநாயகர், சந்திரசேகரர் புறப்பாடு. மாலையில் பஞ்சமூர்த்திகள் கயிலாய வாகனம், காமதேனு வாகனம் ஏறிப் புறப்பாடு, திருவீதி உலா வருதல். இதன் நோக்கம் மூவகை வடிவங்கள், மூவகைத் தொழில்கள் மற்றும் மூவகை இடங்கள் ஆகிய ஒன்பது நிலைகளையும் கடந்து ஆன்மா நிலையை அடைதல் வேண்டும் என்பதே ஒன்பதாம் நாள் திருவிழாவின் குறிக்கோளாகும்.

## பத்தாம் நாள் திருவிழா

பரணி தீபம் : ஒரு பரம்பொருள் ஐந்து மூர்த்திகளாக விளங்குவதைத்தான் விடியற்காலையில் கருவறையில் ஏற்றப்படும் பரணி தீபம் உணர்த்துகிறது. அதாவது ஒரு பெரிய கற்பூரத்தைச் சோதிச் சுடராக்கி, சிவனுக்குத் தீபாராதனை நடைபெற்று பின் இத்தனிச் சுடர் ஒரு பெரிய மடக்கிலுள்ள ஒற்றை நெய்திரியில் பொருத்தி, இதிலிருந்து நந்தி தேவருக்கு முன் ஐந்து பெரிய அகல்விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இது ஏகன் அனேகன் என்ற தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. பிறகு எல்லாச் சந்நிதிகளிலும் தீபங்கள் ஏற்றப்படும். பகலில் பிரம்ம தீர்த்தத்தில் ஸ்ரீ சுப்பிரமணியர் தீர்த்தவாரி நடைபெறும். இதன் பொருள் இறைவன் பேரின்பப் பெருங்கடலில் அழுந்தச் செய்பவன் என்பதே ஆகும்.

## மகா தீபம்

*மாலை ஐந்து மணியளவில் பஞ்சமூர்த்திகளும் கொடிமரத்திற்கு எதிரேயுள்ள தீப தரிசன மண்டபத்திற்குத் தங்க விமானத்தில் மேள தாளங்கள் முழங்க எழுந்தருளல். பின்னர், சரியாக **5.50** மணியளவில் பரணி தீபத்தின் போது அண்ணாமலையார் சன்னதியில் ஏற்றப்பட்ட ஐந்து அகல்விளக்குகள் மற்றும் அம்மன் சன்னதியில் ஏற்றப்பட்ட ஐந்து அகல் விளக்குகளையும் அர்த்தநாரீசுவரர் உடன் வரச்செய்து, கொடிமரத்தின் முன்பாக அகண்டத்தில் ஒன்று சேர்க்கின்றனர். இதன் பொருள் ஏகன் அனேகனாகி மீண்டும் அனேகன் ஏகனாகின்றான் என்ற தத்துவத்தை உணர்த்துவதாகும்.*

*சரியாக **6.00** மணியளவில் ஒரே நேரத்தில் அண்ணாமலையார் சன்னதியிலும், மலையின் உச்சியிலும், தீபம் ஏற்றப்பட்டு, ஊரெங்கும் இருள் விலக்கி, தீப ஒளி மிளிரச் செய்யும் அழகைக் காணக் கண்கோடி வேண்டும் என்றால் அது மிகையாகாது. இதனைத் தொடர்ந்து வாணவேடிக்கை முழக்கத்துடன் பஞ்ச மூர்த்திகள் தங்க ரிஷப வாகனத்தில் மாடவீதி உலா நடைபெறும். இத்தீபப் பெருவிழா நடைபெறும் அந்நாளில் இலட்சக்கணக்கான மக்கள் தன் உடலையும், உள்ளத்தையும் புனித நீரால் தூய்மை செய்து ஞானப் பெருமலையாய் நிற்கும் சோன மலையை வலம் செய்தும், மலைமீது ஏறி மலைச் சிகரத்தில் தோன்றும் பேரானந்தப் பெருஞ்சோதியைத் தரிசித்தும் பேரின்பக் கடலில் மூழ்குவர். இக்காட்சியைக் கண்டவர் தம் இருபத்தொரு தலைமுறையினருக்கும் முக்தி வரம் கொடுக்கின்றார். அண்ணாமலையார் என அருணாச்சலப் புராணம் கூறுவது முற்றிலும் உண்மையாகும். இதிலிருந்து ஒன்பது நாள் விழாக்களையும் அந்த விழாவின் குறிக்கோளையும் கடைப்பிடித்து வழிபாடு செய்வோர் ஆதியும் அந்தமுமிலா அருட்பெருஞ்சோதியில் மூழ்கித் திளைப்பர் என்ற ஆத்மசோதி தரிசனத் தத்துவத்தை பத்தாம் நாளில் நடைபெறும் இம் மகாதீபத் திருவிழா உணர்த்துகிறது. பின் **11, 12** மற்றும் **13** ஆம் நாட்கள் இரவு முறையே சந்திரசேகரர், பராசக்தி மற்றும் சுப்பிரமணியர் தெப்பத்திருவிழா ஐயங் குளத்தில் வெகு விமரிசையாக நடைபெறும்.*

## முடிவுரை

*இதிலிருந்து எல்லாத் திருவிழாக்களும் உயர்ந்த நெறிகளையும், குறிக்கோளையும் கொண்டு, இவ்வுலகில் வாழும் உயிர்களெல்லாம் நெறியோடு வாழவும், வாழ்ந்த பின் முக்தியடையவும் வழிகோலுகின்றன என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன. மேலும் அண்ணாமலையார் தீபத்தைக் கண்டு வழிபட்டவர் பிறவிப்பயனைப் பெற்றவர்களாவார் என்பதால்தான் உலக மக்கள் அனைவரும் அண்ணாமலையாரை நாடி வந்து நன்மை பெறுகின்றனர்.*

**(நன்றி : திருக்கோயில்களில் திருவிழாக்களும் தமிழர் கலைகளும்)**

# இருளும் விளக்கும்!

முனைவர் ஆ.ஆனந்தராசன், மதுரை

அறியும்பான்மை உடைய மாந்தரிடத்தில் அறியாமையும் இருத்தல் கண்கூடு. பல நேரங்களில் அவர்களது அறிவு விளங்காமற் போகிறது. அந்த அறியாமைக்கும் அறிவு விளங்காமைக்கும் காரணம் எதுவாக இருக்கும்? இந்த வினாவை எழுப்பிக் கொண்டு சமயவாதிகள் அதற்கு விடைகளைக் கூறியுள்ளனர்.

'உயிரிடத்தில் அறியாமையிருப்பது இயற்கை. அதற்குப் போய்க் காரணம் தேடுவது ஏன்' ஒரு சாரார் கூறுவர். இது ஏற்கக் கூடியதன்று.

ஒரு பொருளிடத்தில் இரண்டு மாறுபட்ட தன்மைகள் இயற்கையாக இருக்க முடியாது. மாறுபட்ட தன்மைகள் காணப்பட்டால் அவற்றுள் ஒன்றை அதன் இயற்கை என்றும், மற்றொன்றை செயற்கை என்றும் கொள்ள வேண்டும்.

நீரிடத்தில் குளிர்ச்சியும் மற்றொரு சமயத்தில் அதற்கு மாறாகிய வெப்பமும் காணப்பட்டால், வெப்பத்தைத் தீயின் சேர்க்கையால் வந்த செயற்கை எனவும், குளிர்ச்சியே நீருக்கு இயற்கை எனவும் கூறுகிறோம். அம்முறையில் உயிரிடத்தில் அறிவும் அதற்கு மாறாகிய அறியாமையும் காணப்படுவதனால், அவற்றுள் ஒன்றுதான் உயிருக்கு இயற்கையாகும். மற்றொன்று பிறிதொரு காரணத்தால் வந்த செயற்கையாகத்தான் இருக்க முடியும்.

அப்படிப் பார்த்தால் அறிவுப் பொருளாகிய உயிருக்கு அறிவுதான் இயற்கை என்பது சொல்லாமலே விளங்கும். அறியாமை என்பது அதற்கு வேறொரு காரணத்தால் வந்த செயற்கை என்று கூறி விடலாம். இதனால், செயற்கையாய் வந்த அறியாமையை உயிரின் இயற்கை என்றால் பொருந்தாது என்பது விளங்கும்.

இனி, பிறப்பு நிலையில் உயிர் உடம்பின் சேர்க்கையைப் பெற்று நிற்கிறது. அறிவில்லாத உடம்பின் சேர்க்கையினாலேதான் உயிருக்கு அறியாமை உண்டாகிறது என்று கூறுகின்ற மதங்கள் உண்டு. இஃது அனுபவத்திற்கு ஒவ்வாத கருத்தாகும்.

உடம்பு ஊக்கமோடு செயற்படுகின்ற காலத்தில் உயிருக்கு அறிவு நன்கு விளங்குகிறது. உடம்பு செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையிலும், மூர்ச்சை நிலையிலும் அறிவு நிகழவில்லை என்பது அனுபவமாக அறிந்தது. இதனால், உடம்பின் சேர்க்கையால் உயிருக்கு அறிவு விளங்குவதன்றி மறைவதில்லை என்பது தெளிவாகும். இது பற்றியே, உடம்பினால் உயிருக்கு அறியாமை உண்டாகவில்லை என்றும், அறிவை மறைத்து அறியாமையை உண்டாக்குகின்ற வேறொரு பொருள் இருத்தல் வேண்டும் என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது.

கன்மம் என ஒன்று உள்ளது என்பதையும், அதுவே உயிர்கள் எய்தும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதையும் பலரும் ஒப்புக் கொள்வர். அந்தக் கன்மமே

உயிர்களின் அறிவைத் தடுக்க அறியாமையை உண்டாக்கும் என்று சில சமயவாதிகள் கூறுவர். கன்மம் செயற்படும் முறையை அறிந்தோமானால் இக்கருத்துப் பொருந்தாது என்பது புலனாகும்.

கன்மம் ஒருவருக்குத் தீமை தரவேண்டும் என்று இருந்தால், அந்த நேரத்தில் அக் கன்மம் அவருடைய அறிவைத் தூண்டித் தீமை வரும் வகையில் செலுத்தும். காட்டாக, ஒருவர் இருசக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். எப்பொழுதும் மெதுவாக வண்டியை ஓட்டுவதே அவர்க்கு இயல்பு. ஆனால் இந்த நேரத்தில் அவர் படுகாயம் அடைந்து துன்பப்பட வேண்டும் என்று இருக்கிறது. அது அவருக்கு எப்படித் தெரியும்? அதற்கு ஏற்ப அவருடைய கன்மம் அவரது அறிவைச் செலுத்துகிறது. அதிவேகமாக வண்டியை ஓட்டும்படி அவரது அறிவைத் தூண்டுகிறது. அந்த விதி வழியே அவரது மதி செல்கிறது. விதி செலுத்த அவரும் விரைந்து வண்டியை ஓட்டுகிறார். அந்த விரைவு விபத்திலே முடிகிறது.

இவ்வாறே கன்மம் ஒருவருக்கு நன்மை தரவேண்டும் என்று இருந்தால் அந்த நேரத்தில் அக்கன்மம் அவருடைய அறிவை நல்ல முறையில் தூண்டி நன்மை வரும் வகையில் செலுத்தும். மந்த அறிவுடைய ஒருவரையும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சிறப்பாகச் செயல்படும்படித் தூண்டி அவரது கன்மம் அவருக்கு வெற்றியையோ, எதிர்பாராத பெரும்பயனையோ தேடித் தந்து விடும்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ஓர் உண்மை தெளிவாகும், கன்மம் தன்னைச் செய்தவருக்கு நன்மை விளையும் முறையிலோ தீமை விளையும் முறையிலோ அவரது அறிவைத் தூண்டி விடுமேயன்றி, அவரது அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்காது என்பதே அந்த உண்மையாகும்.

இதுவரை கூறியவற்றால் உயிரின் அறியாமைக்கு உடம்பின் சேர்க்கையே காரணம், கன்மமே காரணம் என்பார் கூற்றுக்கள் பொருந்தா என்பது போதரும். சைவ சித்தாந்தம் அக்காரணங்களை ஏற்பதில்லை. அது, கண்ணை மறைக்கின்ற புற இருள் போல அறிவை மறைக்கின்ற அக இருள் ஒன்று உண்டு என்று கூறி அதற்கு ஆணவ மலம் என்ற பெயரையும் இட்டு வழங்குகிறது, பிறவித் துன்பத்தையும், பேரின்பமாகிய வீட்டின்பத்தையும், அதனைப் பெறுவதற்குத் துணைபுரியும் மேலோனாகிய இறைவனையும் அறியவொண்ணாதபடி மாந்தரின் அறிவை மறைத்து நிற்பது அந்த ஆணவவிருளே என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

ஆணவ மலத்தின் இயல்பை உமாபதி சிவம் போல எடுத்துக்காட்டியவர்கள் வேறுயாருமில்லை. உலகில் இருளை விட இருண்ட பொருள் உண்டா? உண்டு. உயிர்களிடத்தில் அஞ்ஞானமாகிய மார்க்கத்தை விளைவிக்கின்ற ஆணவ மலம் அப்படிப்பட்ட பொருள். அதன் முன்னால் உலகத்து இருளும் என்று செல்லும்படி ஆகிவிடும் என்றால் அந்த ஆணவ மலம் எவ்வளவு இருண்டதாக இருக்க வேண்டும்! இக்கருத்துப்பட "இருள் ஒளிர இருண்ட மோகமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்" என்று சைவப்பிரகாச நூலிற் கூறினார் அவ்வாசிரியர்.

மேலும், ஆணவ மலம் தான் ஒரு பொருள் இல்லை என்னும்படி உயிரில் பொருந்தியிருக்கும் எனவும், ஆணவத்தின் இருப்பைத் திருவருள் துணையால் அறியலாமேயன்றி வேறு எவ்வகையாலும் அறிதல் இயலாது எனவும் அந்நூலில் கூறியுள்ளமை காணலாம்.

இந்த ஆணவ மலத்திற்கு மாற்றுப் பொருளாக இருப்பது மாயையாகும். ஆணவம் அறிவை மறைக்கின்ற இருள் என்றால், மாயை அறிவை விளக்குகின்ற ஒளி எனலாம். சூழ்ந்துள்ள இருளைச் சிறிதளவு நீக்கிப் பொருளைக் காட்டுகிற விளக்குப் போல மாயை உயிரைப் பற்றியுள்ள ஆணவ இருளை ஓரளவு நீக்கி அதன் அறிவை விளங்க வைக்கிறது. இதனை,

*புகலுமலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை*
*பொருந்தியிடும் அரனருளால் போதம் தீப*
*சகலமெலாம் உடனாய வாறு போலத்*
*தரும் அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்*
*இகலி வரும் இவை யுணரின் இருள் வெளியாம் தன்மை*

என வரும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறியலாம். ஆன்ம அறிவை விளக்குதல், மாயையின் செயல் அறிவைத் தடுத்து நிற்றல் மலத்தின் செயல். இவையிரண்டும் இங்ஙனம் ஒளியும் இருளும் போல ஒன்றாகி நிற்பன என்பது இச்செய்யுளில் உணர்த்தப்பட்டுள்ளது.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உடம்பு மாயையினால் ஆனது. மாயையை விளக்கு எனக் குறிப்பிட்டோம். எனவே இந்த உடம்பும் விளக்குப் போன்றதேயாகும். உடம்பும் உடம்பிலுள்ள பொறி முதலிய கருவிகளும் செயற்படுகிறபோது நமக்கு உலகைப் பற்றிய அறிவு உண்டாகிறது. இந்த செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையில் நாம் யாதொன்றையும் அறியமாட்டாமல் உண்மையே வடிவாய் இருக்கின்றோம். இதனால், உடம்பினாலேயே நமக்கு அறிவு விளங்குகிறது என்பது புலனாகும். இது பற்றியே உடம்பினை விளக்கு என்றனர்.

ஆணவமாகிய இருளில் நிற்கின்ற உயிர் மாயையின் காரியமாகிய உடம்பை விளக்காகக் கொண்டு பொருள்களை அறியும். அவ்விளக்கு இல்லாவிடின் அஃது ஒரு பொருளையும் அறிய மாட்டாது. அறியாமை உடையதாகவே இருக்கும் என்று சிவஞானபோதம் கூறும்.

*"மாயா தனு விளக்கா மற்றுள்ளம் காணாதேல்*
*ஆயாதாம் ஒன்றை"* (வெண்பா .27)

விளக்கு என்பது ஓர் இடைக்கால ஏற்பாடே. அதுவே இருளை முற்றிலும் நீக்கிவிடாது. இருள் முழுதும் நீங்க வேண்டுமாயின் பேரொளியாகிய சூரியவொளி வரவேண்டும். விளக்கொளியில் நீங்கியும் நீங்காமலும் இருந்த இருள் சூரியவொளி வரும்போதே அறவே அகலும். அவ்விடியல் வரும் வரையில் இருளை நீக்கிக் கொள்வதற்கு ஓர் இடைக்காலத் துணையாக விளக்கினைக் கொள்கிறோம்.

இறைவன் நமக்கு உடம்பினைக் கொடுத்ததும் இம்முறையிலேதான். நாம் கூடியிருக்கின்ற நிலையும் ஓர் இடைக்கால ஏற்பாடுதான். ஆணவமாகிய இருளினின்றும் சிறிது விடுபடுவதற்கு இந்த உடம்பாகிய விளக்கு உதவுகிறது. ஆனால் அதுவே ஆணவ இருளை முற்றிலும் நீக்கி விடாது. இருள் மலம் முழுவதும் நீங்க வேண்டுமாயின் திருவருளாகிய சூரியவொளி வரவேண்டும். மாயா காரியமாகிய விளக்கொளியால் சிறிது விலகிய ஆணவ இருள் திருவருள் ஒளி வரும்போதே அறவே அகன்றொழியும். அந்த நிலையே சுத்த நிலை எனப்படும். அதுவே ஆன்மாவுக்கு விடிவு காலம்.

அவ்விடியல் வரும் வரையில் அகவிருளை ஓரளவு நீக்கிக் கொள்வதற்குத் தனு கரணம் முதலிய மாயாகருவிகள் இடைக்காலத் துணையாக அமைகின்றன. அது பற்றியே 'விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை' என்று திருவருட்பயன் கூறிற்று.

# விளக்கீடு விழாவின் தத்துவம்

ப.வீரசுந்தரி, திருப்பனந்தாள்

## முன்னுரை

மனித வாழ்வினை மேம்படுத்தும் சிற்புடையதாக்கும் ஓர் உன்னத அமைப்பு ஆலயமாகும். மனித வாழ்வில் ஒற்றுமையையும் பண்பாட்டையும் நிலைபெறச் செய்ய வேண்டிய ஆலயங்களில் விழாக்கள் கொண்டாடபப்படுகின்றது. இவ்விழாக்களுள் ஒன்று உலகப் புகழ் பெற்ற கார்த்திகை விளக்கு விழாவாகும். இவ்விழாவினைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

## விளக்கீடு விழாவின் தொன்மை

விளக்கு எனும் சொல் ஆகுபெயராய் நின்று புறப்பொருட்களை விளக்கிக் காட்டுகின்றது. விளக்கு எனும் பொருள் மக்கள் வாழ்வுடன் பிணைந்திருந்தாலும் விளக்கிற்கென விழா அமைத்துப் போற்றும் மாண்பு மக்கள் வாழ்வில் தொன்றுதொட்டு பயின்று வருவதற்கு சங்கப் பாக்களின் குறிப்புகள் சான்றாகின்றன. "மழைகால் நீங்கிய மாக விசும்பில் குறுமுயம் மறுநிறங்கிளர மதி நிறைந்து அறு மீன் சேரும் அகனிருள் நடுநாள் மறுகு விளக்குறுத்து மாலைதூக்கிப் பழ விழும் முதூர்ப் பலருடன் துன்றிப்ப விழாவுடன் அயர" (அகம்-141) என்பன அப் பாவடிகளாகும்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கார்த்திகை விளக்கு சிறப்பினை, "வளைக்கை மடநன்னார் மாமயிலை வன் மறுகல் துளக்கு இல் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகை மறுகில் தனக்கு ஏத்து இளமுலையார் தையலார் கொண்டாடும் நாள் விளக்கீடு காணரே போதியோ பூம்பாவாய்" எனப்பதிவு செய்து காட்டுகின்றார். சங்கப் பாடல்கள் கார்த்திகை விளக்கீடு விழாவினைப் பொதுவாகக் காட்டினாலும் சமயம் விளக்கீடு விழாவைச் சமயவிழாவாகக் காட்டி வாழ்வில் நிலைபெற்றுவிடச் செய்தது.

## கார்த்திகை விளக்கீடு விழா தத்துவம்

சமயத்துறையில் நடைபெறும் நிகழ்வுகள் யாவும் சமுதாயத்தின் நன்மைக்காகவே செய்யப் பெறுகின்றன. கார்த்திகை விளக்கீடு விழாவின் போது பற்பல மக்கள் ஒன்று கூடி விழாவினைக் காணும் போது பலவகையில் சமுதாய மக்கள் நன்மை பெறுகின்றனர். கார்த்திகை விளக்கீடு விழாவானது திருமால், பிரமன் அகந்தையை நீக்க அழல்தூணாய் நின்று சிவன் நீக்கினார் என்பது புராணம். பிரமன் விட்டுணுவின் வேண்டுகோளுக்கு ஏற்ப இறைவன் மலை வடிவானார். மேலும் மலையுருவில் இறைவனை வழிபடுதல் கடினம் என்று எண்ணி வேண்டிட மலையடிவாரத்தில் சிவலிங்க வடிவாய்த் தோன்றினார். பிரமன் விட்டுணு முதலானோர் துதித்து நற்கதி பெற்றனர். தேவர்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப இறைவன் கார்த்திகை மாதம் முழுமதி நாளன்று மலையின் உச்சியில் ஒளிவடிவாய்க் காட்சி தருவதனை இன்று மலையின் மீது விளக்கிட்டு காட்டுகின்றனர். இங்கு உயிர்கள் நமது சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என எண்ணி வாழ்தல் வேண்டும். யான், எனது என்னும் செருக்கற்று வாழ்தலே நற்கதி தரும் என்பதை உள்ளீடாக உணர்த்துகின்றது.

## ஆலயங்களின் கண்ணாகும் அண்ணாமலை

உலகில் உள்ள எல்லாத் தலங்களையும் உடலாகவும் பிற அங்கங்களாகவும் சுட்டினால் அண்ணாமலைத் தலம் கண் போன்றதாகும். இதனை, "கண்ணினால் விளங்கும் திருமுக முகத்தார் கரியகள் விளங்கும் விரண்டின் பண்ணினால் விளங்கு முடவெல்லா மவையோத் பரமனால் விளங்கு மவ்வருளை யண்ணாறான் விளங்கு மருனை மாநகரா மல்லனோ டருணை மா நகரா எவண்ணிலாப் பதிக ளெவைகளும் விளங்க மெவற்றினுஞ் சிறந்தது என்று இசைத்தான்" என அருணாசல புராணம் எடுத்துக் காட்டுகின்றது.

## முடிப்பு

தொன்மையான விளக்கீடு விழா சமயத்துறையில் திருவண்ணாமலை தலத்தின் தன்மை விழாவாக நின்று உயிர்களுக்கு ஆணவம் தன்முனைப்பு கூடாது என்பதனைச் சமுதாயக் கண்ணோட்டத்தோடு விளக்கிக் காட்டுகின்றது.

**(நன்றி : திருக்கோயில்களின் திருவிழாக்களும் தமிழர் கலைகளும்)**

### திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே.

# மணிவாசகர் தந்த தித்திக்கும் திருவாசகம்

சௌந்தரா கைலாசம்

தெய்வ சிந்தனை தேவையா என்று
ஏளனம் பேசுவோர் இருக்கின் றார்கள்!
உண்டு ஒரு கடவுள் உண்டு எனில் எங்கே?
கொண்டுவா! என்று கூறும் இரணியர்
இன்றும் கூட இருக்கின் றார்களே!
தூணைப் பிளந்து தூய செழுஞ்சுடர்
பாரென முழங்கும் பக்தர்தான் இல்லை!
பக்தியில் முதிர்ந்து பழுத்தால் எந்தச்
சக்தியும் கிடைக்கும் சாந்தியும் நிலைக்கும்!
பக்திஇல் லாநிலை பரவிடில், தெய்வம்
சக்தி இழந்து சாய்ந்து விடாது;
நாம்தான் தளர்ந்து நலமிழந் திடுவோம்
ஓம்தான் உயிரென உணர்ந்துரு காவிடில்
நாதனை வாழ்த்துதல் நமக்கா கத்தான்!
சோதனை நீங்கிச் சுகம்கா ணத்தான்!
ஆடியும் ஓடியும் அலைந்தும் இதுவரை
தேடிய(து) என்ன? தெரிந்ததா சுகம்?
வெள்ளியும் பொன்னும் மின்னும் வயிரமும்
உள்ளத்(து) அமைதிக்(கு) உதவுகின் றனவா?
இதற்கு மேலும் எதற்கு என நினைக்கும்
நிலைக்கு வந்து நாம் நிற்கின் றோமா?
ஆசைக் கனவுகள் அறுபட் டனவா?
ஆனந் தம் வந்(து) அகப்பட் டதுவா?
கனக்கும் இதயக் கவலை ஒழிந்ததா?
மிதக்கும் ஒருதனி மேன்மை வந்ததா?
பசித்தால் புசித்துப் பாயை விரித்துக்
களைத்தால் படுத்துக் கண் அயர்ந் திடவா
மண்ணிலே வந்து மனிதன் பிறந்தது?
என்ன வாழ்விது என்னவாழ் விதுவென
அலுத்துக் கொள்ளவா ஆண்டவன் படைத்தான்?
நினைத்துப் பார்த்திட நேரமா இல்லை?
இறப்பதும் பிறப்பதும் இல்லை நம் கையில்!
நடுவிலே உள்ளது நம்முடைத் தில்லையோ?
முறைப்படி வாழும் முயற்சிவேண் டாவோ?
பொல்லாத ஐந்து புலன்களின் பேச்சைக்
கேட்டு வாழ்க்கை கெட்டிட லாமோ?
எந்த மனிதனும் இணையி லா ஒரு

சுகம்பெறத் தானே சுழன்று வருகிறான்?
ஓயாது என்றும் ஓடித் திரிவது
தீராப் பெருஞ்சுகம் தேடிப் பெறத்தான்!
தொலைத்த இடத்திலே சுகம்தே டாமல்
நினைத்த இடத்திலே நின்று தேடினால்
பொழுது தானே போகும் வீணாய்
எந்த இடத்தில் எப்படித் தொலைத்தோம்?
அந்த இடத்தை அறிந்தவர் சிலர்தாம்
சிதறி அழிவதைச் சிறிதும் கருதா(து)
உதறி எறிந்துவிட்(டு) உயர்ந்தவர் சிலர் தாம்!
பகையது நீங்கிப் பக்தியாம் சந்தனப்
புகையது வளர்த்த புண்ணியர் சிலர் தாம்!
எந்திர ஓசையில் இருந்து விடாமல்
மந்திர ஓசையில் மகிழ்ந்தவர் சிலர்தாம்!
ஏதோ ஐந்து எழுத்தென்(று) இராமல்
ஆதா ரம்என அறிந்தவர் சிலர்தாம்!
காலப்போக்கில் கரையா முழுமுதற்
கோலம் கண்டு குழைந்தவர் சிலர்தாம்!
பிறரும் பெறுக அப் பேரின்பம் என
அறிந்ததைச் சொல்லி அமைந்தவர் சிலர்தாம்!
மற்றொரு மனிதன் வந்திடு வானோ - நாம்
பெற்றுள நிலைக்கெனப் பெரிதும் கலங்கும்
இந்த உலகினில் எல்லா மனிதரும்
சுகம்பெறும் வழியினைச் சொல்லித் தருகிற
பித்தர்களும் சிலர் பிறந்துள் ளார்கள்!
அவர்களுள் ஒருவரே அருள்மணி வாசகர்!
இதயங் களுக்கு இடையிலே பாலமாய்,
உணர்வுகள் போய்வர உதவுவ தற்கு
மொழியென ஒன்று முளைத்தத னாலே
தெளிவுறப் பெற்றோம் திருவா சகத்தை!
முந்தை வினையெலாம் முடிந்திட முன்னாள்
மந்திரி சொன்ன மணிமொழிக் கோவை!
முதிர்ந்த அனுபவ முத்திரை நெடுகப்
பதிந்திருக் கின்ற பரம்பொருட் சாலை!
நித்தியம் என்பதன் நினைவை வளர்த்திடும்
சத்திய வாசகத் தரும தெரிசனம்!
"தாயினும் மிக்க தயவினை, மனிதனே,
நீ இனும் என்கொலோ நினையா திருப்பது?"
என்ற கேள்வியை எழுப்பி, மனிதனை
எழுப்பிட எழுந்த இன்னிசைக் கோபுரம்!
ஊழித் தனிமையில் உதவும் என்(று) ஈசன்

தேடிக் கொணர்ந்த தீந்தமிழ் அமுதம்!
வீழ்த்த இருக்கும் விதியையும் மாற்றி
வாழ்வு கொடுக்கும் வரப்பிர சாதம்!
அமுதெனும் தமிழின் அழகு முழுவதும்
திரண்டிருக் கின்ற திருவா சகநூல்,
எடுத்துப் படிக்கும் இதயத்தை எல்லாம்
தடுத்தாட் கொள்ளும் தகுதி உடையது!
மணிகளை மொழிகளாய் மாற்றிமா ணிக்க
வாசகர் நமக்கு வழங்குவ தெல்லாம்
பிணிகளைப் போக்கிப் பிறவியைக் கடந்து
பேரின் பத்தைப் பெறுவதற் காகவே!
கற்பனை யாகக் கட்டிய கோட்டையின்
அற்புதம் சொல்லி அழைத்திட வில்லை!
விலைபோ காத வெற்றுக் கதையைத்
தலையிலே கட்டும் தந்திர மில்லை!
படிப்படி யாகப் பார்த்ததை மிகவும்
வெளிப்படை யாக விளக்குகின் றாரவர்!
இடரினைப் பரிசாய் எய்திய பொழுதும்
சுடரினை வியந்து சொக்கி இருந்தவர்!
"உரிமையால் சொல்கிறேன் உய்யவை! இல்லையேல்
மரியா தைஇனி வானிலே பறக்கும்"
என்றவர்; நீ,நான் எனும்பே தத்தைக்
கொன்றவர், தெய்வக் கோலம் கண்டவர்!
ஆன்ம நாயகன் ஆரத் தழுவிய
மேன்மையால் அழியா மேனி பெற்றவர்!
அந்தமும் முதலும் ஆனவன் நெருங்கிய
சொந்தமென் றானபின் சுகத்தினுக் கென்ன?
அத்தனைச் சுகத்தையும் அடிகளால் எப்படி
மொத்தமாய்த் தாங்க முடிந்ததோ? ஆகா!
எட்டிரண்(டு) அறியா என்னையும் ஏற்றினை
பட்டிமண் டபமெனப் பாடுகின் றாரவர்!
"ஆண்ட கருணை ஐயனை எண்ணி
உருக நெஞ்சம் உடம்பெலாம் இல்லையே;
கால் முதல் தலைவரை கண்கள் இல்லையே"
எனமிக நினைந்து ஏங்குகின் றாரவர்!
முந்தி எவரோ மொழிந்ததைக் கொணர்ந்து
பந்தியில் எடுத்துப் பரிமாற வில்லை!
எல்லையில் லாத இறைவனின் கருணை
அமுதினைப் பருகி ஆனந் தித்தவர்
தொட்டுத் தொட்டுச் சுவைத்த அருமையைப்
பிட்டுப் பிட்டுப் பிறர்க்(கு) அளிக் கின்றார்!

அருந்திப் பார்த்துவிட்(டு) அற்புதம் என நமை
விருந்துக்(கு) அழைக்கிறார் 'வெளியூர்'க் காரர்!
ஞான சித்தரின் நல்வழி சென்றால்
தெளிந்து நிற்கலாம் தெய்வம் ஆகலாம்!
அவரைச் சிவமென் ஆக்கிய தெய்வம்
என்னை உங்களை ஏன் ஆக் காது?
கலந்தஅன் பாகிக் கசிந்து உள் உருகினால்
நடந்தே தீரும் ஞான நாடகம்!
துடிப்பதா இன்னும்நாம் துயரினில் விழுந்து?
படிக்கலாம் மணிமொழிப் பனுவலை உணர்ந்து!
படிக்கப் படிக்கப் பக்திஉண் டாகும்
பெற்றியன் முருகனைப் பெற்றவன்! நம்மைச்
சுற்றிய வினைகளைச் சுட்டெ ரிப்பவன்!
சாம்பலைப் பூசிய சங்கரன் நாமம்
சோம்பலைத் தவிர்க்கும் சுகத்தைக் குவிக்கும்!
நிம்மதி என்பது நிர்மலன் கோயில்
சந்நிதி யில்தான் சாத்தியம் ஆகும்!
இறைவனைத் தொழுதால் என்ன கிடைக்கும்?
பணம்கிடைத் திடுமா? பதவிநிலைக்குமா?
அப்படிக் கேட்பதில் அர்த்தமே இல்லை.
சிவனைத் தொழுதால் சிந்தை தெளியும்!
அவனை உணர்ந்தால் அமைதி நிலவும்!
பக்தர்க ளுக்கும் பகலிர(வு) உண்டு!
எப்பொழு தும்போல் எல்லாம் நடக்கும்! எனில்
பார்வையில் புதிய பக்குவம் பிறக்கும்!
தொழுதுபார்த் தால்தான் சொல்வது புரியும்
அழுதுபார்த் தால்தான் ஆனந்தம் தெரியும்!
அழுதால் இறைவனை அடையலாம் என்று
சுருக்க வழியினைச் சொல்கிறார் வாசகர்!
அழுதுபார்த் திருக்கிறேன்; ஆண்ட வனை நான்
தொழுதுபார்த் திருக்கிறேன்; சுகம்கண் டிருக்கிறேன்.
பதவியில் பணத்தில் பார்த்தறி யாததை- அவன்
உதவியில் கண்டுநான் உளம்நெகிழ்ந் திருக்கிறேன்.
திருவா சகத்திலே திளைப்பேன்; பேச
ஒருவா சகம் இலாது உட்கார்ந் திருப்பேன்!
விரியும் மோன விளிம்பிலே அலைந்து
திரியும் மனத்தைச் சிலையாய் அமர்த்துவேன்!
திருமுறை உதவும் தெளிவிலே கலந்தால்
மறுமுறை எப்படி மயக்கம் உண் டாகும்?
இங்கும் அங்கும் எங்கும் எதிலும்
தங்கி இருப்பது அத் தனிப்பொருள் அலவா?

அனலொடும் புனலொடும் ஐயன் வெளியினில்
தினமிடும் கூத்தொரு திருக்கூத் தல்லவா?
ஓங்கா ரத்தின் உள்ளிருந்து இன்னிசை
பாடு கின்றவன் பாட்டுவிக் கின்றான்;
ஆங்கா ரத்தின் அயல் இருந்(து) என்றும்
ஆடு கின்றவன் ஆட்டுவிக் கின்றான்!
மாங்காட் டரசி மத்தியில் நிலைத்து
வாழு கின்றவன் வாழ்விக் கின்றான்!
பொய்களைக் களைய; புதுவாழ் வருளக்
கைகளைக் கட்டிக் காத்திருக் கின்றான்!
"வினையுளே கிடக்கிறாய்; விழிவிழி அப்பனே
எனையுளே காண்" என எழுப்பிச் சிரிக்கிறான்!
"தினைத்துணை இன்பம் தேடி அலைகிறாய்
அனைத்தெலும்(பு) உள்நெக ஆனந் தம்தர
இங்கிதோ நான்" என இன்குரல் கொடுக்கிறான்!
பிடிக்கப் போனால் பெருமான் ஓடுவான்!
தொழுதிடும் போது துன்பம் கொடுத்து
நழுவிடப் பார்ப்பான் ஞான நாயகன்!
அழுதிட அழுதிட அடிக்கடி கிள்ளுவான்!
காலைப் பிடித்தால் கனிந்து கொஞ்சுவான்!
எங்கே ஓடி எப்படி ஒளிவான்!
காதலால் அவனைக் கட்டிப் போடலாம்
திருவா சகவழி தேடிப் போனால்
சிக்கெனப் பிடித்துச் சிறைப் படுத்தலாம்!
ஆதலால் அன்பரே அருள்மணி வாசகர்
காதலால் நமக்குக் காட்டிய பாதையில்
செல்லுவோம், மகிழ்வில் திளைப்போம், வாழ்வை
வெல்லுவோம் இனிமேல் வெற்றிமேல் வெற்றி
அள்ளுவோம் நாளும் அமைதியை மனத்தில்
கொள்ளுவோம் கூத்தன் திருவடி துணையே.!


**ஜீவகாருண்யம்**

ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம். அந்த சன்மார்க்கமே கடவுள் வழிபாடு. ஜீவகாருண்யம் விளங்கும் போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும். இதனால் உபகார சக்தி விளங்கும். அதனால் இறையருள் தோன்றும் அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாக்காது நடத்தலே ஜீவகாருண்யம். அது ஜீவன்களுக்கு மற்ற ஜீவன்களிடத்தில் உண்டாகும் ஆன்மீக ஒருமைப்பாடு. ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் கிட்டும் இன்பமே கடவுள் இன்பம்.

**(வள்ளலார் இராமலிங்க அடிகள்)**

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய

## திருவண்ணாமலை பதிகம்



1. உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே!

2. தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்மிசை
சிறுநுண் துளிசிதற
ஆமாம்பினை யணையும்பொழில்
அண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல புனைசேவடி
நினைவார்வினை யிலரே!

3. பீலிம்மயில் பெடையோடுடை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல் நிறை
சொரியும் விரிசாரல்
ஆலிம்மழை தவழும்பொழில்
அண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே!

4. உதிரும்மயி ரிடுவெண்தலை
கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும்
எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை இளவெண்பிறை
முடிமேல் கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிடம்
அண்ணாமலை யதுவே!

5. மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும்
அண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை உலவும்புனல்
உடனாவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே!

6. பெருகும்புனல் அண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக்
குறுநோயடை யாவே!

7. கரிகாலன குடர்கொள்வன
கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை
யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிடம்
இனவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை யதுவே!

8. ஒளிறூபுலி யதளாடையன்
உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறுபட விளையாடிய
விகிர் தன்இரா வணனை
அளறூபட அடர்த்தானிடம்
அண்ணாமலை யதுவே!

9. விளவார்கனி படநூறிய
கடல்வண் ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே!

10. வேர்வந்துற மாசூர்தர
வெயில் நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர
மறையாவரு வாரும்
ஆரம்பர் தம் உரைகொள்ளன்மின்
அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான் நல்ல
கழல் சேர்வது குணமே!

11. வெம்புந்திய கதிரோனொளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே!

# மகத்துவமிக்க திருவெம்பாவை

அமரர் எஸ்.எஸ்.தியாகராஜா, (ஓய்வு நிலை ஆசிரியர்)

மார்கழி மாதம் மகிழ்ச்சிக்குரிய மாதம். மழைபெய்து நிலம் குளிர்ந்து பயிர்களெல்லாம் செழித்து வளர்ந்திருக்கும். பூஞ்செடிகள் எல்லாம் பூத்துக் குலுங்கும். இறைவனுக்குச் சாத்தும் மலர்களெல்லாம் மலர்ந்திருக்கும். மார்கழி மாதம் நீராடலுக்குப் பெயர் போனது. மார்கழியின் சிறப்பை ஆண்டாள் "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள், நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்" என்று பாடியிருக்கிறார்.

மார்கழி மாதம் பிறந்ததும், பெண்களெல்லாம் விடியற் காலை எழுந்து வீடுவாசல் பெருக்கி முற்றம் கூட்டி, நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து வீபூதி பூசி முற்றத்தை சாணத்தால் பெருக்கி மாக்கோலம் போட்டு சாணத்தால் அல்லது மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடித்து அதில் பூவும் அறுகம் புல்லும் குத்தி பிள்ளையாரை கோலத்தின் மத்தின் மத்தியில் வைத்து தீபமேற்றி வணங்குவார்கள். பெண்கள்.

மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகப் பாடல்களில் திருவெம்பாவையும் ஒன்று. இது பக்திச் சுவை கொண்டது. திருவாசகம் தேனினும் இனியது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். இது இருபது பாடல்களைக் கொண்டது. மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்திற்கு பத்து நாட்களுக்கு முன்னர் திருவெம்பாவை நோன்பு ஆரம்பமாகிறது. திருவெம்பாவை காலத்தில் சைவ மக்கள் வைகறைப் பொழுதில் எழுந்து திருவெம்பாவை பாடல்களைப் பாடுவது வழக்கம்.

திருவெம்பாவை என்பது ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியை வியந்து பாடுவது. அருட்பெருஞ்சோதி என்பது சிவனைக் குறிக்கும். திருவெம்பாவை இறைவனைத் துயில் எழச் செய்கிறது. ஞானசொரூபியாகிய இறைவனுக்கு உறக்கமும் விழிப்பும் உண்டோ? ஆண்டவனைத் துயிலுணர்த்துவது போல நம்மை நாமே துயில் எழுப்புவதாகும். ஆதிரைக்கு முந்திய பத்து நாட்களும் நீராட்டு நாட்களே. இவை திருவெம்பாவை தொடங்கியதும், விடியற்காலை பெண்கள் கூட்டமாகச் சென்று சிவனின் புகழ்பாடி ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் நின்று அவர்களைத் துயில் எழுப்புவார்கள்.

*மானே நீ தென்னலை நாளைவந்(து) உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானே வந்து எம்மை தலையளித்து ஆட்கொண்டருளும்
வான் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.*

என்று பாடினார். இப்படிப் பெண்கள் தம் மணவாழ்க்கைக்கு ஏற்ற கணவனை இறைவனிடம் கேட்கிறார்கள். பெண்கள் இந்த நோன்பை அனுட்டித்து நல்ல மணவாழ்க்கைக்கு வரம் கேட்கிறார்கள். அந்தக் காலத்துப் பெண்கள் கணவன் இறந்ததும் உடன் கட்டை ஏறுவார்கள். மணவாழ்க்கை ஏற்பட்டுவிட்டால் பின்பு அதனை மாற்றிவிட மாட்டார்கள். "உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம் உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவர் ஆவார்" என்று பாடுகிறார்கள். இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடியார்கள்தான் எமக்கு கணவராக வேண்டும் என்று பாடுகிறார்கள்.

மார்கழி மாதம் திருவெம்பாவை காலத்தில் பெண்கள் இப்பாடல்களைப் பாடிக்கொண்டே போவார்கள். மார்கழி மாதம் கடும் குளிர், சிறு சிறு மழைத்தூற்றல், குளிரும் பனியும் சேர்ந்து உள்ளத்தையும், உடம்பையும் அமைதிப்படுத்தும். அந்நேரம் படுத்திருந்து இப்பாடல்களைக் கேட்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்.

இப்பாடல்கள் பெண்களுக்கே மாணிக்கவாசகர் பாடியுள்ளார். அதற்கு மாறாக ஆண்கள் இப்பொழுது இதனைப் பாடுகிறார்கள். அவர்கள் சங்கு ஒலிக்க சேமக்கலம் அடிக்க விடியற்காலையில் பாடிக்கொண்டு போவார்கள்.

திருவெம்பாவை காலத்தில் கோயில்களில் சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெறும். இறுதி நாளாகிய திருவாதிரை நட்சத்திரத்தன்று ஆருத்திரா தரிசனம் சிறப்பாக நடைபெறும். நடராசப் பெருமான் இருக்கும் கோவில்களில் பெருமானுக்கு அபிடேகம் செய்து சிறப்பான முறையில் திருவிழா நடைபெறும். திருக்கேதீஸ்வர ஆலயத்தில் திருவெம்பாவை அதிவிசேடமாகக் கொண்டாடப்படுகிறது. தில்லை நடராஜப் பெருமான் திருத்தலத்தில் மார்கழி திருவாதிரை திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இத்தனை பெருமை வாய்ந்த மார்கழி திருவெம்பாவை காலத்தில் சிவபெருமானின் தாள்பணிந்து அருள்பெறுவோமாக!

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

**– மாணிக்கவாசக சுவாமிகள்**

89ஆவது நினைவு தினம் - 26.11.2019

# தேசியத் தலைவராகப் போற்றப்பட்ட சேர் பொன்.இராமநாதன்



ஈழத்திருநாட்டில் சைவத்தமிழ் மக்களின் தலையாய தலைவராக என்றும் போற்றிப் புகழ்ந்துரைக்கப்படும் பெரியார் அமரர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்றால் மிகையாகாது. இலங்கையில் தேசியத் தலைவராக மதிக்கப்பட்ட பெருந்தகை, சைவத்தமிழ் மக்களின் வாழ்வில் என்றென்றுமே மறக்கப்பட முடியாதவர்.

யாழ்.மானிப்பாயைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் (கேட் முதலியார்) அ.பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது புதல்வராக கொழும்பில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணி கல்விக் கழகத்தில் கற்றார். பதின்மூன்றாவது வயதில் பிரேசிடென்சி கல்லூரியில் படிப்பைத் தொடர்வதற்காக சென்னைக்குச் சென்றார். சேர் றிச்சர்ட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற வழக்கறிஞரானார். பின்னர் சொலிஸிட்டர் ஜெனராக பதவி வகித்து 1906ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

சிறுவயது முதல் தீவிர கடவுள் பக்தியுடையவராக விளங்கிய இவர் சமய விடயங்களை ஆழமாகக் கற்றார். சைவ சித்தாந்தம், பகவத்கீதை போன்ற அரிய நூல்களை ஆராய்ந்து கற்றறிந்து கொண்டார். திருமுறைப்பாடல்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட பெரியார் இராமநாதன் அவற்றைப் பாதுகாப்பதிலும் பெரிதும் கவனம் செலுத்தினார். சித்தர்கள், யோகிகளை மதிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இந்தியாவில் அருட்பரானந்தர் சுவாமிகள் என்ற மகானை சந்தித்தபோது, அவரது ஆற்றுப்படுத்தலே இவரை ஆத்மீக அறப்பணிகளில் நாட்டம் கொள்ள வைத்தது. ஈழத்துச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நல்லாசியும் இவரது உன்னதமான பணிகளை சிறப்பாக ஆற்றுவதற்கு வழிவகுத்தது.

சேர் பொன்.இராமநாதன் நிறுவிய கல்விச்சாலைகள் பல்கலைக்கழகமாக இன்று பல ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவதற்கு வித்திட்டுள்ளது. சைவசமயம் நிறுவன ரீதியாக வளரவேண்டும் என்பதற்காக பல செயற்றிட்டங்களை ஆரம்பித்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது தலைவராக விளங்கிய இவர், சைவ மாநாடுகளை பெரிய அளவில் நடாத்த வேண்டும் என திட்டமிட்டார். 1909 ஆம் ஆண்டு கீரிமலையில் மிகப்பெரிய சைவ மாநாட்டை தலைமை தாங்கி நடாத்தினார். சமய ஒழுக்கங்கள், தமிழர் பண்பாட்டு பாரம்பரியங்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைத்தார். இப் பெருமகனாரின் நினைவு நாளில், இவரது அரும்பெரும் தொண்டினை நினைந்து போற்றுவோம்!

**- ஆறு.திருமுருகன்**

# அவன் அருளாலே அவன் தாள் வணங்கி

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமை ஆதீனம் 26ஆவது குருமகா சந்நிதானம்

"அவனன்றி ஓரணுவும் அசையாது " என்பது தாயுமானவர் வாக்கு. "காட்டுவித்தால் யார் ஒருவர் காணாதாரே, காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்பது அப்பர் அருள் வாக்கு. சிவபெருமானின் அருளின்றி யாரும் எதையும் செய்ய இயலாது. இக்கருத்தை அவரவர் வாழ்விலும் அநுபவ வாயிலாக நன்கு உணரலாம்.

சூரியனைக் காண வேண்டுமானால் அவனது ஒளியைக் கொண்டுதான் அவனைக் காணவேண்டும். அவன் ஒளி இன்றி அவனைக் காண இயலாது. நமது கண் காணும் ஒளியே அன்றிக் காட்டும் ஒளி அன்று. காட்டும் ஒளியாகிய சூரியன் காட்டினால், காணும் ஒளியாகிய கண் அதைக் காணும். அதைப்போல் காட்டும் ஒளியாகிய சிவனருள் காட்டினால், காணும் ஒளியாகிய ஆன்மா காணும் தன்மைத்து. இதனைத்தான் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று மணிவாசகர் அநுபூதியுரையாக அறிவிக்கின்றார்.

இதே கருத்தைத் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் மீது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய விநாயகர் இரட்டைமணி மாலையின் முதல் பாடலும் குறிப்பிடுகின்றதைக் காணலாம்.

*என்னை நினைத்து அடிமைகொண்டு என் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்-புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.*

நாம் இறைவனை நினைக்க வேண்டுமானாலும், வாழ்த்த வேண்டுமானாலும் வழிபட வேண்டுமானாலும் அவன் நம்மை நினைத்து, நமக்குவரும் இடர்களைக் களைந்து, தன்னையே நாம் நினையுமாறு நம்மிடத்து அவனைத் தானாகத் தருகின்றான். இது நம்பியாண்டார் நம்பிகளின் அனுபவம்.

திருஞானசம்பந்தரும் இக்கருத்தை ஒருவகையால் நமக்கு உணர்த்துகின்றார். திருச்சிராப்பள்ளிப் பெருமானை "நன்றுடையான்" என்று எடுத்துப் பாடும் பாடலில் மூன்றாம் வரியில் "சென்றடையாத திருவுடையான்" என்று பெருமானின் அருள்நிறம் பேசுகிறார்.நாமே சென்று அடைய முடியாத திருவை உடையவன் பெருமான். அதனால் நாமே சென்று அவனை அடையமுடியாது. ஆனால் அவனே நம்மீது கருணை கொண்டு அருளினாலன்றி நாமே அவனை அடைய முடியாது என்பதே அதன் பொருள். மணிவாசகரும், "நானேயோ தவம் செய்தேன்" என்னும் திருவாசகத்தின் மூன்றாம் அடியில் தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான் என்ற பாடல் தொடரால் இக்கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

இதற்கு அரண் செய்வது போல், உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன் எழுபதாம் குறட்பாவில் விளக்கம் தருகிறார். பேரருளாளனாக இருக்கின்ற பெருமான், தாமே தகுதி இல்லா உயிரைக் காலாந்தரத்தில் தகுதிப்படுத்தி அதற்குத்தாமே அருள் வழங்கு நிலையில் காத்திருக்கிறான். அப்படி அருள் வழங்குபவனை நமது முனைப்பால் நாமே அவனருளைப் பெற்றுவிடலாம் எனில் அது இயலாது. இக்கருத்தை விளக்கும் திருவருட்பயன் குறளைக் காண்போம்.

*தாமே தருமவரைத் தம்வலி யினால்கருதல்*
*ஆமே இவன்யார் அதற்கு.*

மேற்கண்ட அநுபூதிமான்களின் அருள்வாக்குகளால் அவனருளால்தான் அவனை வணங்கி உய்யலாம் என்பது தெளிவாகின்றதன்றோ !

# சுவாமி விபுலானந்தரது இலக்கியப்பணி ஒரு பார்வை

செல்வி.பூலோகம் செல்வதியம்மா (உதவி விரிவுரையாளர்),
தமிழ்த்துறை கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்

தமிழுலகமே போற்றி வணங்கக்கூடிய பன்முகப்பட்ட ஆளுமையின் சிகரம் சுவாமி விபுலானந்தர். இதற்கான சான்றுக் கூற்றுக்களை நோக்கின், கலாநிதி சு.வித்தியானந்தனின் பார்வையில் இவர் ஒரு தமிழ்த்துறையின் முதற் பேராசிரியர், கலாநிதி நா.சுப்பிரமணியன் பார்வையில் யாழ் நூலின் சொந்தக்காரன், வித்துவான் சா.இ.கமலநாதனின் பார்வையில் தனித்துவமானவர். கவிஞர் முருகையனின் பார்வையில் "அபூர்வக் கலவை", முனைவர் பெ.சு.மணி அவர்களது பார்வையில் இராமகிருஸ்ணர் இயக்கத்தில் சுவாமி விபுலாந்தர். இன்னும் எத்தனையோ புலமைவாதிகளும், பேராசியர்களும், தமிழ் ஆர்வலர்களும் விபுலானந்த நலன்விரும்பிகளும் தொட்டுக்காட்டிய விடயங்கள் ஏராளம். காரணம் விபுலானந்தர் அப்படிப்பட்ட ஒரு பிறவி. திருவள்ளுவரது,

*"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃது இலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று"* (குறள்-236)

எனும் குறளுக்கு உயிர் கொடுத்தவர். இவர் ஆற்றிய பணிகளும் செய்த சேவைகளும் ஏராளம். அதிலே நான் எடுத்துக் கொண்ட ஆய்வுப்பரப்பு இவர் தமிழ் இலக்கியப் பதிப்பிற்கு ஆற்றிய சேவை பற்றியது. அதற்கு முன்பாக சுவாமி விபுலானந்தரது சிறு அறிமுகத்துடன் அப்பாற் செல்வோமேயானால் 03.05.1892 ஆம் ஆண்டிலே சின்னத்தம்பி சாமித்தம்பி, இராசகோபாலப்பிள்ளை கண்ணம்மை என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவரது இளமைப் பெயர் மயில்வாகனம். 1901 - 1904 வரை தனது இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த மிசன் ஆங்கிலப் பாடசாலையில்

கற்றார். தொடர்ந்து 1904 - 1906 வரை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கற்றார். அதன் பிற்பாடு 1906-1908 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும் கல்வியினைப் பயின்றார். இதனை இங்கே நான் பதிவு செய்வதற்கான காரணம் என்னவெனில் இவர் கல்வி கற்ற பாடசாலைகளும் இவரது இலக்கியப் பணியின் அதுவும் தமிழ் இலக்கியங்கள் படைக்க வேண்டும் என்கின்ற பணிக்கும் தீனி போட்டது எனலாம்.

1906ஆம் ஆண்டிலே கேம்பிறிஜ் ஜூனியர் பரீட்சையிலும் 1908 சீனியர் பரீட்சையிலும் சித்தி எய்தி 1909 புனித மைக்கேல் கல்லூரியிலே ஆசிரியரானார். இவரது ஆசிரியப் பணியின் தொடக்கம் இவரது இலக்கியப்பணியின் வித்தே எனலாம். 1911 இலே தாயாரது இழப்பின் காரணமாக கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலைக்கு ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றார். தனது கல்வி கத்தோலிக்க நிலையில் அமைந்தது என்றால் அவரது பாடசாலைகளும் கூட கத்தோலிக்க மதம் சார்ந்ததாகத்தான் அமைந்தது. 1913 இலே புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியரான இவர் தனது எழுத்துப் பணிக்கான நங்கூரத்தினைப் போட்டார்.

அந்த வகையிலே இவரது இலக்கியப் பரிணாமம் 1915இலே உருப்பெற்றது. இத்தகைய இலக்கியப் பணிக்கு இவர் கடந்து வந்த பாதை மிகவும் சிரமமானதே. இருப்பினும் இலக்கியம் படைக்க வேண்டும், பதிப்பிக்க வேண்டும், ஆய்வு செய்ய வேண்டும் என்கின்ற அவா அவரை முத்தமிழிலும் எழுத்துப் பணியாற்றிட வழிசமைத்துக் கொடுத்தது. அந்த வகையிலே கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, கதிரையம்பதி சுப்பிரமணிய சுவாமி குமாரவேள் நவமணிமாலை என்னும் பிரபந்தங்களினை வெளியீடு செய்தார். இதனை சங்கானை சச்சிதானந்த அச்சியந்திர சாலையிலே பதிப்பித்தார். இதற்கான காரணம் சுவாமி விபுலானந்தரது துறவு நெறிக்கொள்கையே எனலாம். அதனால்தான் முதலாவதாக இறைநிலைப்பட்ட இலக்கியங்களைப் படைத்தார். மதுரை தமிழ்ச் சங்க பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து முதல் பண்டிதர் நிலையில் திகழ்ந்த இவர், தனது தமிழ்ப்புலமையினை இதனூடே விஸ்தரித்தார். வேதி நூலுக்கு உதவியாசிரியராக இருந்து பணியாற்றினார்.

1922இல் துறவறத்தின் பின்னர் இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்த கேசரி (ஆங்கிலம்) எனும் சஞ்சிகைகளுக்கு உரையாசிரியராக இருந்தார். இதே காலகட்டத்தில் மட்டக்களப்பு வித்துவான் பூபாலப்பிள்ளை அவர்களால் உரைவிளக்கம் செய்யப்பட்ட 'உலகியல் விளக்கம்' எனும் நூலினைப் பதிப்பித்தார். 'கர்மயோகம்' எனும் நூலும் இக்காலகட்டத்திலே வெளிவந்தது.

1895இல் அமெரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவின் தமிழாக்கம் இந்நூல் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இங்கே பதிப்பித்தல் பணியின் தொடக்கநிலை உருவாகியது. மதுரைச் சங்கம், சொற்பொழிவு, பாடசாலைப்பணி, அதனைவிட பாடசாலைகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா, வைத்தீஸ்வரா வித்தியாலய அநாதைச்

சிறுவர்களுக்கான மாணவர் இல்லத்தை ஆரம்பித்து நடாத்துதல் எனும் இதர பணிகளிற்கு இடையிலேயும் தொய்வடையவில்லை.

*1926*ஆம் ஆண்டு "மதங்க சூளாமணி" என்னும் நாடகத் தமிழ் நூலினை வெளியிட்டார். நாடகத் தமிழிற்கு புதுவடிவம் கொடுத்தார். தனது இலக்கியப்பணிக்கு தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கழகப் பட்டி மண்டபச் சொற்பொழிவாளர், மாநாட்டுத் தலைமை தாங்குனர், யாழ். ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கப் பரீட்சகர், இராமகிருஸ்ண பாடசாலைப் பரிபாலிப்புப் பொறுப்பாளர் எனும் களங்களை அமைத்துக் கொண்டார். ஏராளமான கட்டுரைகளையும், இலக்கியம்சார் விடயப்பரப்புகளின் தொனிப்பினையும் *1917*இல் இருந்து *1936*வரை நிகழ்த்தினார். மொழி பெயர்ப்பு நிலையிலே தமிழ் மரபு பேணப்பட வேண்டும் என விரும்பிய இவர் *1934*இல் சுவாமி விவேகானந்தரது நூல்கள் அனைத்தையும் தமிழில் பத்துத் தொகுதிகளில் கொண்டு வந்தார். இதனை சென்னை இராமகிருஸ்ண மடத்திலே வெளியீடும் செய்தார். இதிலே சிக்காக்கோ பிரசங்கம், கருமயோகம், இராயயோகம், பதஞ்சலி யோகசூத்திரம் என்பன அடங்கியுள்ளன. இதற்கு 'ஞானதீபம்' என்னும் தலைப்பினை சுவாமி விபுலானந்தர் இட்டார்.

*1938*இல் கலைச்சொற்கள் எனும் அகராதி நூலினையும் வெளியிட்டார். விபுலானந்தர் சேக்ஸ்பியரது நாடகங்களின் விருப்பத்திற்கு உரியவர் என்பதுவும், அவரது நாடகங்களில் சில ஆர்வப் பகுதிகளைத் தமிழாக்கித் தந்திருப்பது அவரது கலையார்வத்தினையும், தமிழுக்கு அவர் அதனை ஆக்கித்தர நினைத்த பெருமையினையும் பறைசாற்றுகின்றது.

*1939*ஆம் ஆண்டு "பிரபுத்த பாரத" எனும் ஆங்கிலச் சஞ்சிகையை தொடக்கி வைத்தார். பிரபுத்த பாரத என்றால் "விழிப்புற்ற பாரதம்" என்று பொருள். இதில் விழிப்புற்ற தமிழகத்தின் குரலைக் கேட்க வைத்த பெருமை விபுலானந்தரையே சாரும்.

*1940*ஆம் ஆண்டு பிரபுத்த பாரத இதழில் சங்க இலக்கியத்தின் பத்துப்பாடலில் இருந்து ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் விளக்கமளித்துள்ளார். பழந்தமிழ் இலக்கியத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வெளியிட ஆசைப்பட்டார். *1943*ஆம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகத் தமிழுக்கு ஆற்றிய பணி ஏராளம். தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். மகாகவி பாரதியாரைப் பல்கலைக்கழக மட்டத்திற்கு எடுத்துச் சென்றவர் சுவாமிகளே. அதன் ஈர்ப்பு அவரது கவிதைப் புனைவுக்கு வழி சமைத்தது.

*'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ......'*
என்பது அனைவராலும் பேசப்படும் கவிதை. இதனை விட

*வேலை முகட்டிற் கதிரெழுமுன் விரைந்து பறித்து புது மலரால்*
*கோலமுறவே புனை மாலை யார்க்கோ வெங்கள் குலக் கொழுந்தே*
*கோலமுறவே புனை மாலைக் குரியார் யாரென் றறியாயோ*
*சீலமுறமும் மெமையாண்ட செல்வருடைமை யாமலவோ.*

எனும் கவிதை இதற்கு சான்றாகும்.

நாட்டரசர் வேண்டுகோளின்படி சுவாமி விபுலானந்தர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியேற்றுத் தமிழ் தொண்டினை ஆற்றினார். இங்கே இசை சம்பந்தமான ஆராய்ச்சியினையும் மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

1947ஆம் ஆண்டு யாழ்நூலின் வெளியீடு. இந் நூல் இசைத்துறையே வியந்து போற்றுகின்ற அரிய நூலாகும். இவ் ஆய்விற்காக பதின்நான்கு ஆண்டுகள் செலவழித்தமை ஆய்வினது தரத்தினைக் காட்டி நிற்கின்றது. இதிலே வருடங்களைச் செலவழித்த காரணத்தினால் வேறு பல விடயங்களை சுவாமிகளால் எழுத முடியாது போய்விட்டது. 1947ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

முடிவாக நோக்கும்போது "ஆளுமை" எனும் ஒற்றை வரிக்குள் வடித்து விட முடியாத விபுலானந்தர் ஆங்கில அறிவுடன் சங்கமித்து விஞ்ஞானம், தொழில் நுட்பம், தத்துவம் எனக் கற்றவர். தமிழ் மொழியினையும் அதன் இலக்கணப் பாண்டித்தியத்தையும் கூடிய செய்யுள் வடிவங்களையும் கற்றுத் தேர்ந்தது ஆச்சரியம் மட்டுமல்ல, அதன்வழி பணியினைச் செவ்வனே செய்தது அபூர்வம், வியப்பு, விந்தை, தெய்வாம்சம். காலக்கணிப்பின் படி இவரது இலக்கியப் பணிகள் மட்டுமே என்னால் எடுத்துக்காட்டப்பட்டது. ஏனைய பணிகளை எனது ஆய்வுத் தலைப்பினது தன்மை குறித்து விட்டுச் சென்றுள்ளேன். எது எவ்வாறாயினும் விபுலானந்தர் தமிழ் மொழிக்காற்றிய பணியினை தமிழ் உலகம் வியந்து போற்றி அவரை எந்நாளும் நினைவு கூரத்தக்க வகையில் வழிசமைத்துள்ளது என்பது கண்கூடு.

## உசாத்துணை நூல்கள்


1. வித்தியானந்தன் .சு, தமிழ்த்துறை முதற் பேராசிரியர் - அடிகளார் படிவமலர், 1969.
2. மணி.பெ.சு. 'விபுலானந்த அடிகள்' புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க உரை. 2003.
3. யோகராசா.செ. 'சுவாமி விபுலானந்தர் - பார்வை' அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு, 2015.
4. சிவாசாமி.வி., 'அடிகளாரின் இசை நடனப் பணிகள்'
5. இந்து ஒளி சஞ்சிகை, 2017.

# யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

இவ்வுலகில், முன்னேற்றம், அபிவிருத்தி, மேம்பாடு,முற்போக்கு, புதுமையென்னும் சொற்பதங்கள், பெரும்பாலும் உலகியல் சார்ந்த சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம், அரசியல் தொடர்பான விடயங்களுடன் தொடர்புபட்ட நிலையிலேயே பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவையாவும் புற உலகம், அதாவது பௌதிக உலகம் சம்பந்தப்பட்டவை. புறச் சிந்தனை, அறிவு, ஆய்வுகள் மூலம் ஏற்படுபவை. இவற்றைத் தவிர, அகச்சிந்தனை, அகத்தாய்வு, தன்னையாராய்தல், தன்னிறைவு பெறுதல் மூலமும் மனித முன்னேற்றம், மனித அபிவிருத்தி, வாழ்க்கைத் தரமேம்பாடு, ஏற்படுவதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவையாவும் அகம் சம்பந்தப்பட்டவை. ஆன்மிக முன்னேற்றம் எனப்படுகின்றது. ஆன்மிக வளர்ச்சியில் பாரத தேசமும் அதன் அண்டைய நாடுகளும் பண்டு தொட்டு முன்னணியில் இருந்து வருகின்றன. இதற்குக் காரண கர்த்தாக்களாக விளங்கியவர்கள், விளங்கி வருபவர்கள் மகரிஷிகள், சித்தர்கள், மகாஞானிகள், முனிவர்கள் முதலியோர் ஆவர். இவர்கள் அகத்தவத்தில், அகநோக்கில் ஆழ்ந்து மூழ்கி உயிரறிவை உள்ளுணர்வால் பெற்றவர்கள். உலகத்தவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்கள், சித்தர் பெருமக்கள்.

சித்தர்கள் அகச்சிந்தனையில் மூழ்கி, அமிழ்ந்தி ஆன்மிக முத்துக்களைக் கண்டெடுத்து உலகத்தவர் யாவரும் ஆன்மிக உண்மைகளை அறிந்து நலம் பெறும் பொருட்டுப் பொதுமை, பொதுமைஅறம், பொதுவுடைமை ஆக்கியுள்ளனர். சித்தர்கள் தம் உள் அனுபவத்தால் கண்ட உண்மைகளை மகா வாக்கியங்கள், அருட் செயல்கள், பாடல்கள், அருளுரைகள் மூலம் உலகத்து மக்களுக்கு வழங்கியுள்ளனர். அவை நமது முதுசம், முதுசொத்துக்கள். அந்த உரிமையை ஏற்க மறுப்பவர்கள், மீறி நடப்பவர்கள், உலகில் நல்ல வண்ணம் வாழ மறுப்பவர்கள் ஆகிவிடுகின்றனர். அகத்தை அழகுபடுத்த, ஒழுங்குபடுத்த வழிகாட்டியவர்கள் சித்தர்கள். அகம் அழகு படுத்தப்பட்டு விட்டால், புறமும் இயல்பாகவே அழகாகி விடும். எங்கே அழகு வீற்றிருக்கிறதோ அங்கே ஒழுங்கு, சீர்மை உண்டு. அவ்வாறே எங்கே ஒழுங்கு செம்மை காணப்படுகிறதோ, அங்கே அழகு பரிமளிக்கும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஔவையார் வாக்கு.

உண்மை, அழகு, நன்மை, செம்மை ஆகிய ஒழுக்கப்பண்புகளை வளர்ச்சிபெறச் செய்வதே ஆன்மீகத்தின் நோக்கம் எனச் சித்தர் நெறி கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னை ஆராய வேண்டும், தற்சோதனை செய்ய வேண்டும், தன்னை அறிய வேண்டும், தான் யார் என்பதை உணர வேண்டும். தமது குறைகளை நீக்கி, நிறைகளை மேலும் நிறைவாக்க வேண்டும். நீக்கப்பட்ட குறைகள் மேலும் இடம் பெறாமல் தடை செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும். இக்கருத்து சித்தர்கள் ஆன்மீகவாதிகள் தத்துவ ஞானிகள் அனைவரும் ஒப்புக் கொண்டதாகும். இதனை ஏற்றிப் போற்றி வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வதே ஆன்மிக வாழ்வு. ஆன்மிகத்தின் உள்ளடக்கம் இறையுணர்வும் அறநெறி வாழ்வும் என்பர். வேதாத்திரி மகரிஷி அறவாழ்வில்

மனத்தூய்மை, சொல்தூய்மை, செயல்தூய்மை ஆகிய மூன்றையும் ஒருங்கே காணலாம்.

> "முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
> அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்கிறார் திருமூலர்.

அகத்தில் கண்கொண்டு மெய்ப்பொருள் உணர்ந்து என்றென்றும் ஆனந்தக் களிப்பில் திளைத்து இருப்பவர்கள் சித்தர்கள். உலகப் பொருள்கள் அனைத்தும் நிலையற்றவை; பொய்ப்பொருள்கள். அவற்றை விடுத்து, மெய்ப்பொருள் ஞானம் பெறுவதால் கிடைக்கப் பெறுவது ஆனந்தம் என்று திருமூலர் கூறுகிறார்.

"ஆசை விட விட ஆனந்தமாமே" என்பது மூலசித்தரான திருமூலர் திருவாக்கு. இதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் யாழ்ப்பாணத்துச் சித்தர் கடையிற் சுவாமிகள்.

இலங்கைத் திருநாட்டிலே இத்தகைய பரிபூர்ணானந்த நிலையினை அடைந்து, மெய்ப்பொருள் ஞானம் பெற்று, ஒரு சித்தர் பரம்பரைக்கு வித்திட்டவர், யாழ்ப்பாணத்துக் கடையிற் சுவாமியார் ஆவார். இவரின் பூர்வீகம், பெயர், பிறப்பிடம் மற்றும் வரலாற்றுத் தகவல்கள் பற்றிய விபரங்கள் எதுவுமே ஆதாரபூர்வமாக அறிய முடியவில்லை. எனினும் அவர் தொடர்பான செவிவழிச் செய்திகள் சில கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றைத் தழுவி அவரின் வரலாற்றுப் பின்னணியை நோக்குவோம்.

## வரலாற்றுப் பின்புலம்

கடையிற் சுவாமிகள் இந்தியாவிலுள்ள கன்னட மாநிலத்திலுள்ள மைசூர், பெங்களூர் ஆகிய இடங்களில் இளமைக் காலத்தில் வாழ்ந்தவர் என்றும், ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டாம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்தார் என்றும் அறியக் கிடக்கிறது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வணிகப்பெருமகன் வைரமுத்துச் செட்டியார் என்பவரே கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணம் வருவதற்குக் காரணர் ஆக இருந்தவர் எனக் கூறப்படுகின்றது. இலங்கையும், இந்தியாவும் அஞ்ஞான்று ஆங்கிலேயரின் ஆதிபத்திய ஆட்சியின்கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுவாமிக்ள், கன்னட தேசத்திலுள்ள பெங்களூரில் நீதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்திலேயே அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ஒருசமயம் கொலை வழக்கொன்றில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு, மரண தண்டனை விதிக்க வேண்டியதாயிற்று. அவ்வேளை அவர் மனதில் ஞானோதயம் ஏற்பட்டது. அதன் விளைவாக ஒருவனுக்கு மரணதண்டனை விதித்து அவனின் உயிரைப் பறிக்க தான் யார் என்னும் வினா அவரின் மனதில் எழுந்தது. இதுவரை காலமும் நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கி வந்த நீதிபதி, தர்மத்தை உசாவி, நீதி எது? அநீதி எது? என்று சிந்தித்துத் தீர்ப்பு வழங்க எத்தனித்துள்ளார்.

நமது சைவ நெறி, அன்பு நெறியாகவும், அறிவு நெறியாகவும் விளங்குகின்ற சிறப்பினையுடையது. "வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க.." என்கிறார் சேக்கிழார் பெருமான். வேதநெறி என்பது அறிவு நெறி. அறிவின் தெளிவே ஞானம் ஆகும். மனிதனின் கருவி கரணங்களை அகத்தைத் தூய்மைப்படுத்தி, வாழ்க்கையை ஆன்மீக மயப்படுத்தும் தன்மையது ஞானநெறி. அந்த வகையில் நீதிபதியாக விளங்கிப் பலதரப்பட்ட வழக்குகளை விசாரித்து நீதி வழங்கி வந்தவர், தன்னை விசாரித்துத் தற்சோதனை செய்து தன்னை அறியத் தலைப்பட்டார். அதில் சித்தியும் பெற்றார். பற்றுக்கள் அனைத்தையும் துறந்து சிவசம்பந்தியானார். சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் சித்தர்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் தூய்மைப்பட்டு, அறம் கைவந்தவர்கள் மேற்கொள்வதுதான் துறவறம். பொருள் அல்லவற்றைப் பொருள் எனக் கொண்டு அதனைப் பற்றிப் பிடிக்கும் மருள் அகன்று, பொய்யைத் துறக்கவும், மெய்யுடன் உறவு கொண்டு மெய்யைத் தொடரவும் முடியும் நிலை ஏற்படுகின்றது. அந்த வகையில் தமது நீதிபதித் தொழிலை விட்டு விலகி மெய்ப்பொருளைத் தொடரத் தீர்மானித்துத் துறவியானார்.

ஸ்ரீ நரசிம்ம பாரதி என்பவர் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில், முப்பத்திரண்டாவது தலைவராக வீற்றிருந்தார். சித்தர்கள், யோகிகள், ஞானிகள் போன்றோரைப் புடம் போட்டு உருவாக்கக்கூடிய தவவலிமை படைத்தவர். அவரே கடையிற் சுவாமிகளின் ஞானகுரு எனக் கருதப்படுகின்றது. சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகை தருவதற்கு முன்னர் சுவாமி முத்தியானந்தர் என்னும் தீட்சாநாமத்துடன் விளங்கினார் எனவும் கூறப்படுகின்றது.

கடையிற் சுவாமிகள், விசாலமான தோள்களையும், முழந்தாள்கள் வரை நீண்ட கைகளும், பொலிவான முகமும் நீண்டு நுனியில் வளைந்த மூக்கும், அளவான உயரமும் கொண்டு புன்னகை தவழும் வண்ணம் விளங்கியவர் என விவரிக்கப்படுகின்றது. நகைச் சுவையாகப் பேசுவார் என்றும், அவரின் கக்கத்துக்குள் குடை இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. பல்வேறு கோணங்களில் அசைந்தும், ஆடியும் நடனங்கள் புரிந்த வண்ணம் யாழ்ப்பாணம் பெரியகடை வீதிகளில் காட்சியளிப்பதை வழமையாகக் கொண்டிருந்தார். அவர் புரிந்த அருட்செயல்கள் பல சமயகுரவர்கள் செய்த அற்புதங்களுக்கு நிகரானவை. மானிடத்தின் மீது கொண்ட கருணையினால் ஆற்றப்படும் அருட்செயல்கள் அவையாகும். சித்தர்கள் செய்யும் அற்புதங்களைச் சித்துக்கள் என்பர்.

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள பெரியகடை என்னும் பெயர் கொண்ட வர்த்தக வளாகம், புகழ்பெற்ற அங்காடிகள் நிறைந்ததும், சனசஞ்சடி நிறைந்ததுமான பிரதேசமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக மக்கள் தினசரி வந்து கூடும் கேந்திர மையமாகப் பெரியகடை விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பெரியகடை வளாகத்தில், சுற்றித் திரிந்து வாழ்ந்து வந்தமையினால், அவரைக் கடையிற் சுவாமிகள் என மக்கள் அழைக்கலாயினர்.

பெரியகடை வளாகத்தின் வீதிகளில் அமைந்துள்ள வியாபார நிலையங்கள் பலவற்றின் உரிமையாளர்கள் செட்டியார்களாவர். அவர்கள் பெரும் தனவந்தர்களாக அக்காலத்தில் விளங்கியவர்கள். ஆலயங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களை அமைத்தும், பரிபாலனஞ் செய்தும், புண்ணிய கைங்கரியங்களை ஆற்றியும் வந்த பெருங்குடி மக்களாகத் திகழ்ந்தவர்கள். சுவாமிகளின் யாழ்ப்பாணம் வருகைக்குக் காரணராகவிருந்த வைரமுத்துச் செட்டியாரின் இல்லமும், வணிக நிலையமும் பெரிய கடை வீதியிலேயேதான் அமைந்திருந்தன. யாழ்ப்பாணம் வருகை தந்த சுவாமிகள் முதலில் சென்றது வைரமுத்துச் செட்டியாரின் வீட்டுக்கே என்று கூறப்படுகின்றது. அங்கே உணவு கேட்டு வாங்கி உண்டார் என்றும், செட்டியார் ஏற்கனவே சுவாமிகளுக்கு அறிமுகமான அன்பர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரியகடை வளாகத்தின் கடைகளுக்குச் சென்று சுவாமிகள் ஏதேனும் பொருள்களைப் பெற்றால் அவர்களின் வியாபாரம் மிக நன்றாகவும் செழித்து ஓங்கியும் விருத்திபெறும் என்ற திடமான நம்பிக்கை அக்காலத்தில் வியாபாரிகள் மத்தியில் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடையிற் சுவாமிகள் தம் இல்லங்களுக்கு எழுந்தருளி வரவேண்டும், தம்மிடம் உணவு பெற்று உண்ணவேண்டும் என அன்பர்கள் அடியார்கள் பலர் ஆதங்கம் உடையவராக இருந்தனர். எத்துணை அன்பாகவும் பணிவாகவும் ஆதரவுடனும் உணவு வழங்கினாலும், சுவாமிகள் ஒருமுறை சென்று வந்த வீட்டுக்கு அல்லது கடைக்கு மற்றொருமுறை செல்லும் வழக்கம் அவரிடம் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

சுவாமிகள், தம்முடைய அன்பர்கள். அடியார்களிடையே சாதி மத பேதங்கள், செல்வர் ஏழைகள் வேறுபாடு, சமூக உயர்வு, தாழ்வு வேற்றுமைகள், பதவி, புகழ், அந்தஸ்து வேறுபாடுகள் என்று வேற்றுமைகள் காண்பதில்லை. அவர் ஒரு சமரச ஞானி. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எவரும் அவருக்கு இல்லை. எல்லோரிடமும் ஒரே மாதிரியான அன்பினைப் பொழிந்தார். அவர்களின் உடல் நோய்களையும், உளப் பிணிகளையும், துன்ப துயர்களையும், வறுமைப்பிணியையும் தீர்த்தருளினார். அடியார் கூட்டமும் பெருகிற்று, மக்களுக்குத் தெய்வம் போல விளங்கினார். அவர் மருத்துவராகவும், அருள்வாக்கு உரைப்பவராகவும், அற்புதங்கள் அருட்செயல்கள் புரிபவராகவும், ஆனந்த நடனமிட்டுக் களிப்பவராகவும் மக்களுக்குக் காட்சியளித்தார்.

*"பெரியகடை நாதன், பித்தன் திருக்கோலம்*
*கரிய வர்ணச் சீலை, கரித்தோலெனச் சால்வை"*

என கடையிற் சுவாமிகளின் தோற்றத்தை அவரின் சீடர் ஒருவர் வர்ணித்துள்ளார். சித்தர்களின் திருக்கோலம் இவ்வாறுதான் அமைந்திருக்கும் என்பர். அவர்களுக்கு புறக்கோலம் பொருளன்று. அவர்கள் அகத்தே தூய்மையும் அழகும் தெய்வீகமும் உடையவர்கள். ஆற்றல் நிரம்பப் பெற்றவர்கள். அத்தகையவர்களுக்குக் "கூற்றம் குதித்தலும் கைகூடும்" என்பார் திருவள்ளுவர்.

*"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" - (திருக்குறள்)*

முதுமை, மரணம் என்பவற்றைத் தள்ளி வைக்கும் ஆற்றலுடையவர்கள் சித்தர்கள். அவர்கள் சீவன் முத்தர்கள். கடையிற் சுவாமிகளும் இவ்வகையினர் ஆவார். "சித்தன் போக்கு சிவன் போக்கு" என்று ஒரு பழமொழி உள்ளது. "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என மணிவாசகப் பெருமான் சிவபெருமானைப் போற்றுகிறார். பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்குபவன் சிவபெருமான். முதல் சித்தனான சிவனின் நோக்கும் போக்கும் எக்காலத்துக்கும், எந்நாட்டவர்க்கும் பொருந்துவன. அவ்வாறே சித்தன் போக்கும் நோக்கும் அமைகின்றன என்பதனையே இப் பழமொழி நமக்குப் புலப்படுத்துகின்றது. சித்தர் மூலம் சிவமே வெளிப்பட்டு, மனிதர்களுக்குத் திருவருள் பாலிக்கின்றது. அதனாலேயே, சித்தன் போக்கு மட்டுமன்றி சித்தன் வாக்கும், சிவவாக்கு ஆகவே அமைகின்றது. கடையிற் சுவாமிகளின் அருட்செயல்களும் சிவனின் திருவருட் செயல்களாகவே கொள்ளப்படுகின்றன.

கடையிற் சுவாமிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் பெரியகடை வீதிகளிலும், அண்டிய பகுதிகளிலுமே சுற்றிச் சுற்றி நடமாடுவார். நடனமாடியும் திரிவார். சிதம்பரம், பொன்னம்பலத்தின் கண்ணே, தில்லை நடராஜப் பெருமான் காலைத்தூக்கி நின்று, ஆனந்தத் திருநடனம் புரிந்த வண்ணம் உள்ளான். அதனாலேயே உலகம் இயங்குகிறது. கடையிற்சுவாமிகளின் ஆனந்தத் திருநடனத்திற்குப் பெரியகடை வளாகமே பொன்னம்பலமாக விளங்கியது. யாழ்ப்பாணத்து பிரதேசத்து மக்கள் அல்லல்கள், தொல்லைகள், பொல்லாப்புகள் இன்றி அமைதியாக வாழ்ந்தார்கள். "நாம் இருக்கப் பயமேன்", என்று கூறுவது போன்று அமைந்திருந்தது கடையிற் சுவாமிகளின் நடமாட்டம். இறைவன், யாழ்ப்பாணத்து மக்களுக்குக் காவல் தெய்வமாகக் கடையிற் சுவாமிகளை வழங்கியிருந்தமை நோக்கற்பாலது. சுவாமிகளின் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது.

கடையிற் சுவாமிகள், தற்பற்று, பொருட்பற்று என்பவற்றைப் பூரணமாகத் துறந்தவர். நான், எனது எனும் அகங்கார, மமகாரங்களற்றவர். மண், பெண், பொன் எனும் மூவகையிலான ஆசைகளையும் முற்றுந் துறந்த மகா ஞானியாக விளங்கியவர். அவர் ஆன்மிகத்தின் உச்சநிலையில் மெய்யுணர்வு வாய்க்கப் பெற்றவர். முக்காலத்தையும் உணர்ந்த மகரிஷியெனவும் அவர் காலத்தில் வாழ்ந்த மக்களால் துணியப் பட்டார். இறையருளுடன் அற்புதங்களை நிகழ்த்தி, மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்களை வாழ்வித்தார். அவர் ஒரு சித்தர் என்பதால், அவர் புரிந்த அருட்செயல்களை சித்துக்கள் என்பர். யாழ்ப்பாணத்தில் ஒரு சித்தர் பரம்பரைக்கு வித்திட்ட பெருமையும், சித்தர்கள் மீது மக்கள் பயபக்தியுடன் நம்பிக்கை கொள்ள கால்கோள் இட்ட சிறப்பும் கடையிற் சுவாமிகளையே சாரும். அன்பும் கருணையும் சுவாமிகளின் பண்பும் பயனுமாக விளங்கின. தம்முடைய பக்தர்கள் எல்லோரிடமும் ஒரேவிதமாகவே அன்பும் கருணையும் செய்தார்.

**(மிகுதி அடுத்த இதழில்)**

# பூச இனியது நீறு

திருமதி கேசினி கோணேஸ்வரன், அவுஸ்திரேலியா

*அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு*
*வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு*
*பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு*
*திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.*

இது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருநீற்றுப் பதிகத்தில் ஆறாவது பாடல். திருநீறு செல்வமாக இருப்பது, துன்பம் போக்குவது, மனவருத்தத்தைத் தணிப்பது, சிவலோக இன்பத்தை அளிப்பது, எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பது, புண்ணியரால் பூசப்பெறுவது. இத்துணை மகிமை வாய்ந்த திருநீற்றின் பெருமையை உலகெங்கணும் விளங்கச் செய்யவே, உமையம்மையார் சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டினார் என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். "சிரந்தழுவு சமயநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க அரந்தைகெட புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி".

வெண்ணீற்றிற்கு பல பெயர்கள் திருமுறைகளிலும், சாத்திரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. வெண்ணீறு, தூநீறு, பொடி, பூதி, சாம்பல் எனப் பல பெயர்கள் திருமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தன்னை அணிந்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும், பாவங்களை எரித்து நீறாக்குவதால் பசுமம் எனவும், தன்னை அணிந்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் காப்பதனால் இரட்சை எனவும், ஆன்மாக்களின் மலத்தை நீக்குவதனால் ஷாரம் எனவும் திருநீறு பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பசுவின் சாணத்தை அக்கினியாலே சுடுதலால் உண்டாக்கிய வெண்ணிற திருநீறு அணியத்தக்கது எனவும், கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியும் அணியக்கூடாது எனவும் ஆறுமுக நாவலர் சைவ வினா விடையில் கூறியிருக்கிறார்.

திருமுறைகளில் பல இடங்களில் வெண்ணீறு என குறிப்பிடப் பட்டு இருக்கின்றது. அவற்றுள் சில:

*"சுரும்புடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண் ணீற்றானே"*
*"வேதமோதி வெண்ணீறு பூசிவெண்கோவணந் தற்றயலே"*
*"பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப் புலியூர்ச்சிற்றம்பலமே"*
*"கோங்கு அலர் சேர் குவி முலையாள் கூறா வெண்ணீறு ஆடி"*
*"பொன்னியலும் திருமேனி வெண்ணீறு பொலிந்திடும் ஆகாதே"*
*"சுண்ண வெண்ணீறு அணிவித்து தூ நெறியே சேரும்வண்ணம்"*
*"பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்"*
*"செய்யா வெண்ணீறு ஆடி செல்வா சிறு மருங்குல்"*

"செய்யானை வெண்ணீறு அணிந்தானை சேர்ந்து அறியா"
"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்"
"துப்பனே தூயாய் தூய வெண்ணீறு துதைந்து எழு துளங்கு ஒளி"
"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்"

பசுவின் சாணத்தை அக்கினியாலே தகித்து, திருநீறு பெறும் செயலிற்கு பெரியோர்கள் சித்தாந்த விளக்கம் அளிப்பர். சாணம் ஆன்மாவையும், சாணத்திலுள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், அக்கினி திருவருளையும், தகித்தல் திருவருள் பதிதலையும், வெண்ணீறு மலங்கள் நீங்கித் தூய்மையான ஆன்மாவையும் குறிக்கும் என்பர்.

"செய்யடா உருண்டைதனையு லர வைத்துச்
செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு
மெய்யடா சொல்லிகிறே நீறிப் போகும்
வேகானந்த மானதொரு நீற்றை வாங்கி
வையடா சவ்வாதுவுடனேபு னுகு சேர்ந்து
மார்க்கமுடன் அங்கெனவே லட்ச மோதி
மையமென்ற நெற்றியிலேவி பூதி பூசி"

என அகத்தியர் பரிபூரணம் என்ற நூலில் உள்ள எழுபதாவது பாடல் குறிப்பிடுகின்றது.

திருநீற்றை பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும், சுரைக்காய் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும் என சைவ வினா விடையில் கூறப்பட்டுள்ளது. திருநீற்றைச் சிவமாகவும், திருநீறு வைத்திருக்கும் பையை சிவாலயமாகவும் மதிக்க வேண்டும்.

விபூதியை வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று, நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவசிவ" என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும். திருநீற்றை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் அணியலாம். திருநீற்றை பரவிப் பூசுதல் உத்தூளனம் எனப்படும். "ஒண்மைய னேதிரு நீற்றைஉத் தூளித்தொளிமிளிரும் வெண்மையனே" என திருவாசகத்தில் மணிவாசகர் பாடியுள்ளார்.

திருநீற்றை நீரில் குழைத்து மூன்று குறியாக தரிப்பதையே திரிபுண்டரம் என கூறுவார். சமய தீட்சை பெற்றவர்கள் சந்தியா காலங்களிலே சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப் புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களிலும் குறித்தளவு நீளங்களில் தரித்துக் கொள்வர்.

"நித்திரை செய்யப் புகும் போதும், நித்திரை விட்டெழுந்த உடனும், தந்த சுத்தம் செய்த உடனும், சூரியன் உதிக்கும் போதும், அஸ்தமிக்கும் போதும், ஸ்நானஞ் செய்த உடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனஞ் செய்த பின்னும் விபூதி ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்." என ஆறுமுக நாவலர் சைவ

வினா விடையில் கூறியிருக்கிறார். இறைவன் எல்லா உயிர்களும் பாசங்கள் நீங்கி வீடு பேறடைய வேண்டும் என்ற அளப்பருங் கருணையினால் வெள்ளை நீறணியும் மேனியவர்க்கெல்லாம் உள்ளமாய பிரான் ஆனார்.

திருநீறு அணிவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி திருமூலர் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

> "கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
> மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
> தங்கா வினைகளும் சாரும் சிவகதி
> சிங்கார மான திருவடி சேர்வரே"

வினைகள் நீங்கி, பிறவிப்பிணி அறுத்து, சிவபெருமானின் திருவடிகளை அடையலாம் என கூறியுள்ளார்.

"மந்திர நமச்சிவாயவாக நீறணியப் பெற்றால் வெந்தறும் வினையும் நோயும் வெவ்அழல் விறகிட்டன்றே" என்கின்ற அப்பர் வாக்காலும் நீறணிதலால் ஏற்படும் பயனை அறியலாம்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த "மந்திரமாவது நீறு" எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகம் முழுவதும் திருநீற்றின் பெருமைகளை எடுத்துச் சொல்கிறது. அவற்றுள் சில: நினைப்பவரைக் காப்பது, கொடிய துயர்களைப் போக்குவது, சிவஞானத்தைத் தருவது, வீடுபேறு அளிப்பது, எண்வகைச் சித்திகளையும் தரவல்லது, ஆசையை அறுப்பது, முடிவான பேரின்பநிலையை அளிப்பது, மனவருத்தத்தைத் தணிப்பது, மெய்ப்பொருளை உணர்த்துவது.

> "வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம்வை கற்குவைகல்
> பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்லேன்பொடி பூசிவந்துன்
> அருகொன்றி நிற்க அருளுகண் டாய்"

என சிவபெருமானிடம் வேண்டுகின்றார் சேரமான் பெருமாள் நாயனார்.

திருநீறு அணியாமால் விடுதலால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் திருமுறைகளில் உள்ளன. மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் அச்சப்பத்தில் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

> பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
> துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
> திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
> றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

வெண்ணீறு அணியாதவரைக் கண்டால் அஞ்ச வேண்டும் என்கிறார்.

திருநாவுக்கரசு நாயனார் "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்.........அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே" எனவும்,

“திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்..........அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில் ..........பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.” எனவும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவில் “திருநீறிடா உருத் தீண்டேன் என்னும் திருநீறு மெய்திரு முண்டந் தீட்டிப் பெருநீல கண்டன் திறங்கொண்டிவள் பிதற்றி” என பாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அடியார்கள் எந்நேரமும் திருநீறு பூசியே வழிபடுவார்கள் என்பதனை திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் “நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல் தேறுசிந்தை யுடையார்கள் சேரும் இடம்” எனவும் திருநாவுக்கரசு நாயனார் “நீற்றினை நிறையப் பூசி நித்தலு நியமஞ் செய்து ஆற்றுநீர் பூரித் தாட்டு” எனவும், திருமூல நாயனார் ” பூதி அணிவது சாதனம் ஆதியில்” எனவும் பாடியுள்ளனர். “நீறில்லா நெற்றி பாழ்” என்ற ஔவையின் வாக்கும் சிந்திக்கத்தக்கது.

திருநீற்றைச் சிவனெனவே நினைந்து வழிபட்ட பல சிவனடியார்களின் வரலாறு பெரியபுராணத்தில் உள்ளது. மெய்ப்பொருள் நாயனாரிடம் பலதடவை போரிட்டு தோற்றுப்போன முத்தநாதன் இறுதியாக மெய்யெல்லாம் திருநீறு பூசி, ஆயுதத்தை மறைத்து புத்தகம் போல் வைத்து, சிவாகமப் பொருள் கூறுவதாக சொல்லி, நாயனாரை வாளால் அரிந்த போதும், அவர் தத்தனிடம் “திருநீற்று நெறியைக் காப்பீர்” என முத்தநாதனிற்கு எந்த கெடுதலும் வராமல் பாதுகாத்த பின்பே தன் உயிரை நீத்தார். இதனை “வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்” என சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியுள்ளார்.

சிவனிடம் பக்தி கொண்ட ஏனாதிநாயனாரிடம் பல தடவை போர் தொடுத்து தோற்றுப்போன அதிசூரன், அவரைத் தனியே போருக்கு அழைத்து, திருநீற்றைப் பூசி கேடயத்தால் மறைத்து வந்தான். போர் தொடங்கியதும் கேடயத்தை நீக்க, திருநீற்றைக் கண்ட ஏனாதிநாயனார் சிவசின்னம் தரித்தவருடன் போரிடாமல் மடிந்தார். “தம் பெருமான் சாத்தும் திருநீற்றுச் சார்பு உடைய எம்பெருமான் ஏனாதி நாதர் கழல் இறைஞ்சி,” என சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடியுள்ளார்.

சிவபக்தரான சேரமான் பெருமாள் நாயனார் பட்டத்து யானை மீது நகர்வலம் வரும் போது, துணிகளை வெளுக்கும் சலவைத் தொழிலாளி, தலைமீது உவர்ப்பொதி சுமந்து கொண்டு வரும்போது, அவனுடைய உடல், மழையினாலே கரைந்த உவர்மண் ஊறப்பெற்று வெண்மையாய் தோற்றமளிக்க, சேரமான் யானையினின்றும் இறங்கிச் சென்று, அவனை வணங்கி “தேவரீர் திருநீற்றுவேடத்தை நினைப்பித்தீர்” என்று கூறினார்.

மருணீக்கியார் சமண சமயத்தில் சேர்ந்திருந்து சூலை நோய் தாங்க முடியாது தமக்கையாரிடம் திரும்ப, திலகவதியார் திருநீறு கொடுத்து நோய் தீர உதவினார். சேக்கிழார் பெரியபுராணத்தில் “திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார்”, “திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்ற” எனக் கூறுகிறார்.

சிவசின்னங்கள் எதுவும் அணியக்கூடாது என்ற நிலையில் கூட மன்னன் அறியாமல் மார்பில் திருநீறு பூசி, மன்னனையும் நாட்டையும் காப்பாற்றிய மங்கையர்க்கரசி அம்மையார் பெருமை சொல்லுந் தரமன்று. "பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரை" என சேக்கிழார் பாடுகின்றார். பாண்டிய மன்னனின் வெப்புநோய் எதனைக் கொண்டும் தீர்க்க முடியாமற் போக, திருஞானசம்பந்தப் பெருமான் மன்னன் உடலில் திருநீறு பூசி, திருநீற்றுப் பதிகம் பாடி குணப்படுத்தியது நீங்கள் அறிந்ததே.

திருநீறு "ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்குஞ் சிவத்துவப் பேற்றிற்கு அறிகுறி" என ஆறுமுக நாவலர் குறிப்பிடுகிறார். ஊழிக் காலத்தில் புவனங்கள் அனைத்தும் வெந்து தணிந்த சாம்பலை சிவபெருமான் வாசமிகு திரவியமாகப் பூசினார் என்பதனை "வெந்த சாம்பல் விரை எனப் பூசியே, தந்தையாரொடு தாய் இலர்" என திருஞானசம்பந்தரும், "வெந்த சாம்பல் விரை என்பது தமது அந்தம் இல் ஒளி " என சேக்கிழார் பெருமானும் பாடியுள்ளனர். இதன் தத்துவம் இறைவனே எல்லாவற்றுக்கும் பற்றுக்கோடாக உள்ளான் என்பதையும் , சங்கார காலத்தில் எரிந்த சாம்பல் கூட இறைவனைச் சார்ந்தே உள்ளது என்பதையும் குறிக்கின்றது.

திருநீறு நிலையாமையை உணர்த்தும் அரிய செல்வமாய் உள்ளது. ஒவ்வொருவரும் ஒருநாள் சாம்பலாகப் போகிறோம் என்பதை ஒவ்வொரு முறை திருநீறு அணியும் போதும் உணர்ந்து, நம்மிடம் உள்ள மன அழுக்குகளை களைந்து, அன்பு நெறிக்கு ஆளாகி, சிவானந்த நிலையை அடைய வேண்டும் என எண்ணுவோம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

சிறுவர் விருந்து

## சிவபெருமான் மண் சுமந்தமை

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்

மதுரைக்குப் பக்கத்திலே வைகை என்னும் ஆறு பாய்கிறது. அந்த ஆறு முன்னொரு காலத்திலே மிகவும் பெருகி, வயல்கள் சோலைகள் முதலிய இடங்களையெல்லாம் அழித்து அந் நகரத்தின் மதிலைக் கிட்டி வந்தது. சனங்களெல்லாம் அதைக்கண்டு பயந்து கலக்கமடைந்தார்கள். ஆற்றுக்கு அணைகட்டி அதைத் தடுக்காவிட்டால் அது பட்டணத்துக்குள் வந்துவிடும். வீடு வாயில்களை அழிக்கும். மாடு, ஆடுகளை வாரிக்கொண்டு போய்விடும். சனங்கள் அமிழ்ந்தி இறந்து போவார்கள். ஆதலாற் சனங்கள் தங்களைக் காக்கும் அரசனாகிய பாண்டியனிடம் போய்த் தங்களுக்கு நேர்ந்த ஆபத்தைத் தெரிவித்தார்கள்.

அரசன் மந்திரிமார்களுடன் அவ்விடத்திற்குச் சென்றான். ஆறு பெருகி ஊரை அழிப்பதைக் கண்டு அரசன் மந்திரியைப் பார்த்து "கடவுளுடைய பூசைகளிலே ஏதுங் குறைவு நேர்ந்ததோ? அல்லது சிவனடியார்களுக்கு யாதுங் குறை செய்தேனோ? என்ன காரணத்தால் என்னுடைய குடிகளுக்கு இவ்வளவு தீமை வந்தது?" என்று சொல்லித் துக்கப்பட்டான்.

பின்பு அரசன் தூதர்களை நோக்கி "நம்முடைய ஊரிலுள்ள சனங்கள் எல்லாரையும் வைகை ஆற்றங் கரைக்கு அணைகட்ட வரும்படி முரசு அடிப்பியுங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்களும் அப்படியே செய்தார்கள். உடனே அவ்வூரிலுள்ள சனங்களெல்லாருங் கூரிய மண்வெட்டிகளும், பெரிய கூடைகளும் கொண்டு வைகைக் கரைக்கு வந்தார்கள். ஒவ்வொருவருக்கும் அடைக்க வேண்டிய பகுதி அளந்து விடப்பட்டது.

அவ்வூரிலே பிட்டு விற்றுச் சீவனஞ் செய்யும் செம்மனச்செல்வி என்னும் வயதுபோன ஓர் அம்மையார் இருந்தார். அவருக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை, பிள்ளைகளும் இல்லை. தன்னந் தனியாக இருந்தார். ஆயினும் எல்லாம் வல்ல சிவபெருமானில் அளவில்லாத பக்தியும் இடையறாத் தியானமும் உடையவர். அவருடைய பங்கை அணை கட்டுவதற்கு ஒருவருமில்லை. அந்தப் பங்கு அணை கட்டப்படாமலிருந்தால் அரசனுடைய சேவகர்கள் அவரை வருத்துவார்கள். ஆதலால், அம்மையார் தெருக்களெல்லாம் போய்க் "கூலிக்குப் பிட்டுத் தருவேன்; யாராவது என்னுடைய பங்கைக் கட்டுவீர்களா?" என்று கேட்டார். ஒருவருஞ் சம்மதிக்கவில்லை.

அம்மையார் யாதொரு வழியுமின்றி மனங் கலங்கினார். கண்ணீர் தாரை தாரையாகச் சொரியச் சோமசுந்தரக் கடவுளின் கோயிலுக்குச் சென்றார். அங்கே சுவாமிக்கு முன்பாகப் போய், "சுவாமி, என்னை இவ்வாபத்தினின்றும் நீக்குவார் ஒருவர் இல்லையே! தேவரீருடைய கிருபையால் பிட்டு விற்றுச் சீவிக்கும் எனக்கும் இத்துன்பம் வரலாமோ? தேவரீர் என்னுடைய மனத் துயரத்தைத் தீர்க்காவிட்டால் நான் வேறு யாரிடஞ் சொல்லுவேன்" என்று அழுதுவிட்டுப் போனார்.

சிவபெருமான் அம்மையார்மேல் இரங்கி அவரைக் காக்கத் திருவுளங் கொண்டார். சுவாமி, ஒரு கூலியாளைப் போலக் கந்தைத்துணி உடுத்தித் தலையிற் கூடையும், தோளில் மண்வெட்டியுங் கொண்டு அம்மையாரிருந்த வாயிலில் வந்து "கூலியாள் வேண்டியவர் யாருமுண்டோ? என்று வினவினார். அம்மையார் வெளியே வந்து, "எனக்குக் கூலியாள் வேண்டும்: வருவாயா?" என்று கேட்டார். அதற்குக் கூலியாள் "எனக்கு முற்கூலி தருவாயாயின் வருவேன்" என்றார்.

அம்மையார், "நீ இப்போது உண்ணுகிறதற்குப் பிட்டுத் தருவேன்; இல்லையேற் பிட்டை விற்றுப் பின்னேரம் கூலி கொடுப்பேன்" என்றார். கூலியாளர், "என்னுடைய கூலியாகப் பிட்டை இப்போது தருவாயாயின் நான் அதை உண்டு விட்டு உன்னுடைய வேலையைச் செய்வேன்" என்றார். அம்மையார் அதற்குச் சம்மதித்து

உதிர்ந்த பிட்டு முழுவதையுங் கூலியாளருக்குக் கொடுத்தார். சிவபெருமானாகிய கூலியாளர், "இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும்" என்று அம்மையாருடைய பிட்டை மேலும் மேலும் வாங்கித் தின்றார். எஞ்சியதை வேலை செய்யும் பொழுது உண்ணுதற்காகத் தமது கந்தைத் துணியிலே முடிந்துகொண்டு போனார்.


அவர் ஆற்றங்கரைக்குப் போய் அம்மையாருடைய பாகத்தைக் காட்டும்படி அவரைக் கேட்டார். அம்மையார் அளந்து விடப்பட்ட பங்கைக் காட்டி, "தம்பி இந்தப் பங்கினை அடைத்துவிடு" என்று சொன்னார். சுவாமி அம்மையாரைப் பார்த்து, "நான் உம்முடைய பாகத்தை இதோ அடைக்கின்றேன். யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம், நீர் போம்" என்று சொல்லி அனுப்பினார். அம்மையார் வீட்டிற்குப் போய் விட்டார். கூலியாளர் வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. இடையிடையே விளையாடுவதும் இடையிடையே மண்கொண்டு போய் கரையிற் போடுவதுமாய் இருந்தார். ஆயினும், அணையை வேண்டிய அளவிற்கு உயர்த்தி விட்டார்.

பின்பு, அவர் இளைத்தவர்போல, கூடையைத் தலையணையாக வைத்துக்கொண்டு கொன்றைமர நீழலிலே படுத்து நித்திரை செய்பவர் போலக் கிடந்தார். அப்பொழுது அரசனுடைய அதிகாரிகள் அங்கே வந்தார்கள். அவர்கள் தங்கள் ஏவலாளர்களை நோக்கி, "எல்லாரும் தங்கள் பங்குகளைக் கட்டி முடித்தார்களா என்று பார்த்து வாருங்கள்" எனக் கட்டளையிட்டார்கள். ஏவலாளர்கள் போய் எல்லா இடங்களையும் பார்த்தார்கள். எங்கும் மிக உயரமாகக் கட்டப்பட்டிருந்தது. ஆனால் ஒரு பங்கு மாத்திரம் மற்றையவைகளிலுஞ் சிறிது தாழ்ந்திருக்கக் கண்டார்கள். அப்போது, "இது யாருடைய பங்கு?" என்று அவர்கள் பக்கத்திலே நின்றவர்களை வினவினார்கள். அவர்கள், "இது மதுரையிற் பிட்டு விற்கும் செம்மனச் செல்வியாருடைய பங்கு. இதை அடைக்கும்படி அவ்வம்மையார் கூலியாளரை விட்டிருக்கிறார். அவர் அந்தக் கொன்றைமர நீழலிலே படுத்து நித்திரை செய்கிறார்" என்றார்கள்.

ஏவலாளர்கள் இதை அதிகாரிக்கு அறிவித்தார்கள். அதிகாரி அதிக கோபங் கொண்டு, "அவனை என்முன் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். ஏவலாளர் உடனே அவரை எழுப்பிக் கையிலே பிடித்து இழுத்துக்கொண்டு போய் அதிகாரிக்கு முன் விட்டார்கள். அதிகாரி தன் பக்கத்திலே நின்ற தண்டஞ் செய்வோரில் ஒருவனைப் பார்த்து, "இங்கே நிற்கும் கூலியாளுக்கு இரத்தம் வடியும்படி அடி" என்று கட்டளையிட்டான். சேவகன் கோபமான வார்த்தைகளுடன் கையிற் பிரம்பை எடுத்துச் சிவபெருமானாகிய கூலியாளுடைய திருமேனியில் அடித்தான். உடனே அவர் மறைந்தருளினார். அந்த அடி பாண்டியரசன் மேற்பட்டது; மந்திரிமார் மேற்பட்டது ; மரங்கள் மேலும் மிருகங்கள் மேலும் பட்டது; எல்லா உலகங்களிலுமுள்ள எல்லா உயிர்கள் மேலும்பட்டது. எல்லாரும் அதிசயித்தார்கள்.

**(நன்றி : சைவபோதம் – முதற் புத்தகம்)**


நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் 20.11.2019 அன்று
நடைபெற்ற நாவலர் குருபூசை



கொழும்பில் நடைபெற்ற நாவலர் விழா







இந்த சஞ்சிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. (கார்த்திகை – மார்கழி – 2019)